பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 6.00

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 பங்குனி 20 வியாழக்கிழமை (03.04.2003) தொலைபேசி~ 2223378 ஒலி 105

# யாழ்.கோட்டைப் பகுதியில் படை முகாம் அமைக்கும் பணி இடை நிறுத்தம்!

## பாதுகாப்பு அமைச்சர் இணக்கம்

(நமது நிருபர்)

**யாழ்ப்பாணத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலையமான யாழ் மாநகர சபை வளாகம் மற்றும் கோட்டைச் சுற்றாடல் பகுதிகளை அண்டிய இடங்களில் மேற் கொள்ளப்பட்டுவரும் பாரிய படைத் தளம் அமைக்கும் நடவடிக்கைகளை இடைநிறுத்தி வைக்க பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன இணக்கம் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் புதிய படைத் தளம் ஒன்று அமைக்கப்படுவது தொடர்பாக ஆராயும் கூட்டம் நேற்று பாதுகாப்பு அமைச்சின் செயலகத்தில் அமைச்சர் திலக் மாரப்பன தலைமையில் முற்பகல் 10.30 மணி தொடக்கம் 11.30மணிவரை நடை பெற்றது.

இக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன்,ஜோசப் பரராஜசிங்கம்,அ.விநாயகமூர்த்தி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யாழ்.குடாநாட்டில் கேந்திர நிலையத்தில் புதிய படைத் தளம் அமைக்கப்படுவது மக்களின் இயல்பு வாழ்க்கையை பாதித்து அவர்களுக்கு அசௌகரியம் ஏற்படுத்துவதாக அமைவதால் அதனை உடனடியாக வேறு ஓர் இடத்திற்கு மாற்றுவது குறித்து ஆராய வேண்டும் என்று கூட்டமைப்பு எம்.பிக்கள் அமைச்சரிடம் வலியுறுத்திக் கூறினர்.

இதையடுத்தே பாதுகாப்பு அமைச்சர் மேற் கண்டவாறு இணக்கம் தெரிவித்தார்.

படைத்தளத்தினை வேறோர் இடத்திக்கு மாற்றுவது குறித்து ஆராயப்பட்ட போது காக்கைதீவு, கல்லுண்டாய்வெளி ஆகிய இடங்களில் அதனை அமைப்பது குறித்த ஆலோசனையையும் எம்.பிக்கள் முன் வைத்தனர்.

இது குறித்த இறுதி முடிவு எல்லோரும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக அமைய வேண்டும் என்றும் எம்.பிக்கள் வலியுறுத்திக் கூறினர்,

இச் சந்திப்பில் பாதுகாபபு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரி பெர்ணான்டோ மேலதிக செயலாளர் சரலியட்ட இராணுவத் தளபதி லயனல் பலகல்ல ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை தளம் அமைக்கின்றமை குறித்து கூட்டமைப்பு எம்.பிக்கள் நேற்று முன் தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்து பேச்சு நடத்தியிருந்தமையும் படைத் தளம் அமைக்கப் படுகின்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர்

(10ம் பக்கம் பார்க்க)



பக்தாத்தில் கூட்டுபடைகளின் விமானத் தாக்குதலில் சேதமடைந்த தனது வீட்டுக்கு முன்னால் இருந்து அழுதுகொண்டிருக்கும் ஈராக்கிய பெண்மணி

## வரதன் குழுவின் தலைவர் நேற்று சுட்டுக் கொலை

### மட்டக்களப்பில் சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் இராணுவ உளவுபபிரிவுடன் இணைந்து செயற்பட்டு வந்த வரதன் குழுவின் தலைவர் நேற்று இனம் தெரியாத துப்பாக்கி நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

வரதன் என்று அழைக்கப்படும் சீனித்தம்பி ரஞ்சன் (வயது29)என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவர். நேற்று முற்பகல் 11.30மணியளவில் ஆரயம்பதிப் பகுதியில் இளைஞர்கள் சிலருடன் உரையாடிக் கொணடிருந்த போது மோட்டார் சைக்கிளில் வந்த 2 இளைஞர்கள் அவரை கைத்துப்பாக்கியினால் சரமாரியக் சுட்டு விட்டுச் தப்பிச் சென்றுள்ளனர்.துப்பாக்கிச் சுட்டினால் தலை முகம் கழுத்து ஆகிய இடங்களில் காயம் அடைந்த பிரஸ்தாப நபர் உடனடியாக மட்டக்களப்பு மாவட்ட வைத்திய சாலையில் சிகிசசைக்காக அனுமதிக்கப்பட்டார். சிகிச்சை பயனளிக்காத நிலையில் சிறிது நேரத்தில் உயிரிழந்தார். சுட்டு கொல்லப்பட்ட ரஞ்சன்

(10ம் பக்கம் பார்க்க)

### புலிகள் மறுப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஆரையம்பதியில் வரதன்குழுவின் தலைவர் சுட்டுக்கொலலப்பட்டமைக்கும் தமக்கும எந்தவித தொடர்பும் இல்லை என விடுதலைப்புலிகளின் மட்டு அம்பாறை மாவட்ட ஊடகப் பேச்சாளரும் அரசியல் துறைப் பொறுப்பாளருமான கிருசன் தெரி வித்தார்.

மேற்படி சம்பவத்துக்கு விடு தலைப் புலிகளே காரணமென காத்தான்குடி பொலிஸார் குற்றம் சாட்டியமை தொடர்பாக அவருடன் தொடர்பு கொண்டு கேட்டபோதே இந்த மறுப்பை அவர் வெளி யிட்டார்.

தம்மீது பழி போடுவதற்காகவே இக் குற்றச்சாட்டை பொலிஸார் சுமத்துவதாகவும் மாற்று இயக்கங்களோ அல்லது தனிப்பட்ட விரோதிகளோ இச்சம்பவத்திற்கு காரணமாக இருக்கலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

(த)

## தமிழ் இளைஞர் யுவதிகள் பொலிஸ் படையில் இணைவது அவசியம்

### பொலிஸ்மா அதிபர் ரி.இ.ஆனந்தராஜா வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

தமிழ இளைஞர் யுவதிகள் பொலிஸ் படையில் இணைந்து கொள்வதன் மூலம்,தமிழ் மக்கள் அதிக அளவு நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இவ்வாறு பொலிஸ்மா அதிபர் ரி.இ.ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.குடாநாட்டுக்கு விஜயம் செய்த பொலிஸ்மா அதிபர் யாழ். பொலிஸ் தலைமையகத்தில் இடம் பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தமிழ் மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் நல்லுறவும் தொடர்பும் வலுப்பெறாமைக்கு மொழிப் பிரச்சினையே தடையாகவுள்ளது.

இதனை நீக்கும் வகையில் தமிழ் மக்களும் பொலிஸ் சேவையில் இணைந்து கொள்வது அவசியம். இதற்காகவே பொலிஸ் சேவையில் புதியவர்களை இணைக்கும் வகை

(02-ம் பக்கம் பார்க்க)



குடாரப்பு கடற்கரைப் பகுதியில் நேற்று இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு கண்காணிப்புக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்ட இளைஞன்

## குடாரப்பு கடற்கரையில் நடமாடிய இளைஞன் கைது

### கண்காணிப்புக்குழுவிடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி செம்பியன்பற்றைச் சேர்ந்த செல்வரெட்ணம் சுதர்சன் (வயது 22)என்ற இளைஞனை நேற்று யாழ்.குடாநாட்டுப் படைத் தரப்பைச் சேர்ந்த மேஜர் எட்வேட்,கப்டன் ஸ்ரீலால் ஆகிய படைத் தளபதிகள் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் ஒப்படைத்துள்ளனர்.

பிரஸ்தாப இளைஞனை குடாராப்புக் கடற்கரைப் பகுதியில் வைத்து படையினர் கைது செய்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.ஆனால் பிரஸ்தாப இளைஞன் தம்மிடம் சரணடைந்துள்ளதாக யாழ்.படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

சம்பவம் குறித்து செ.சுதர்சன் கூறுகையில் குடும்ப வறுமை காரணமாக கூடாரப்புக் கடற்கரைப் பகுதியில் நகைத் தொழிலுக்குப் பயன்படும் கணவாய் ஓட்டுச் சிப்பி பொறுக்குவதற்காக அங்கு சென்றேன்.

தாகமெடுத்ததால் தண்ணீர் குடிப்பதற்காக

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நிரந்தர நியமனத்தை வலியுறுத்தி சுகாதாரத் தொண்டர்களின் தொடர் மறியல் போராட்டம் நேற்று ஆரம்பம்

## மாகாண சுகாதார சேவை பணிமனை ஸ்தம்பிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சுகாதார தொண்டர்கள் தமக்கு நிரந்தர நியமனம் கோரி யாழ்.மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் பணிமனை முன்பாக நேற்று முதல் கால வரையறையற்ற மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

காலை 7மணி முதல் நடை பெற்ற இம் மறியல் போராட்டத்தில் கோப்பாய்,யாழ்ப்பாணம்,தெல்லிப்பழை, வடமராட்சி,தென்மராட்சி,தீவகம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான சுகாதாரத் தொண்டர்கள் ஈடுபட்டிருந்தனர்.

தமக்கான நிரந்தர நியமனத்தை வழங்கக் கோரியும்,சுகாதார அமைச்சு தமக்குரிய நியமனத்தை வழங்காமை மற்றும் தமக்களித்த வாக்குறுதியை மறந்தமையைக் கண்டித்து பல பதாதைகளை ஏந்தியவாறு போராட்டக் காரர்கள் காணப்பட்டனர்.

இதனால் சுகாதார சேவைகள் பணிமனையின் பணிகள் தடைப் பட்டதுடன ஊழியர்கள் அலுவலகம் செலல முடியாமல் வீதிகளில் குழுமிக் காணப்பட்டதுடன் சிறிது நேரத்தில் வீடு திரும்பியமை குறிப்பிடத்தக்கது.

(உ-4)

# வட்டியில்லாக் கடனாக 800 மில்லியன் டொலர்

## உலக வங்கி வழங்கியது

(கொழும்பு)

சமாதான ஆதரவு நடவடிக்கையாக இலங்கையின் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு உதவும் நோக்கில் உலக வங்கி 800 மில்லியன் டொலர்களை கடன் மற்றும் நிதியுதவியாக வழங்க முன்வந்துள்ளது.

சமாதானப் பாதையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களின் அடிப்படையில் இந் நிதியுதவி வழங்கப்படுகின்றது என உலக வங்கியின் இலங்கைக்கான பிரதிநிதிபீற்றர் கரோல்ட் தெரிவித்துள்ளார்.

உலக வங்கியின் 4 ஆண்டு கடன்திட்டத்தின் கீழ் இந் நிதியுதவி வட்டியில்லாக் கடனாக வழங்கவுள்ளது.

சுகாதார சேவைகள்,குடிநீர் விநியோகம் அகதிகள் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு இந் நிதி பயன் படுத்தப்படவுள்ளது.

கடந்த 5வருடங்களாக வருடாந்தம் 60 மில்லியன் டொலர் என்ற ரீதியில் உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி ஒன்றியம் உதவிகள் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இலங்கைக்கு யப்பான 300 மில்லியன் டொலர்களையும் ஆசிய அபிவிருத்தி வங்கி 240 மில்லயன் டொலர்களையும் வழங்கியுள்ளமையும் தெரிந்ததே. (உ-8)

# இலங்கையில் 75 ஆயிரம் இந்தியர்கள் பிரஜா உரிமை இன்றி வாழ்கின்றனர்

## அமெ.இராஜாங்கத் திணைக்களம் அறிக்கை

(கொழும்பு)

இலங்கையில் சுமார் 75 ஆயிரம் இந்திய வம்சாவளித் தமிழர்கள் பிரஜா உரிமை இன்றி வாழ்வதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஜனநாயக மனித உரிமைகள் மற்றும் தொழிற் பிரிவின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த 100 ஆண்டுகளுக்கு மேலாக பரம்பரையாக இலங்கையில் வாழ்ந்து வரும் இவர்களுக்கு இலங்கைப் பிரஜா உரிமையோ அல்லது இந்தியப் பிரஜா உரிமையோ வழங்கப்படவில்லை.

இதேவேளை இவர்களை இலங்கைப்பிரஜைகளாகப் பதிவு செய்யும் நடவடிக்கையினை அரசாங்கம் மேற் கொண்டுவருகின்றது.

எவ்வாறாயினும் இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளித் தமிழர்கள் பல தசாப்தங்களாக கல்வி, தொழில் வாய்ப்பு உட்பட பல துறைகளில் புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும் அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-8)



# காணாமல் போனோர் விசாரணை உறவினர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கடந்த 1996-1997ஆம் ஆண்டு காலப் பகுதியில் காணாமல போனவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள பாதுகாப்பு அமைச்சின் பணிப்புரையின் படி குறறப்புலனாய்வுப் பிரிவு பொலிஸ் அத்தியட்சகர் நிசந்த பெரேரா தலைமையிலான குழுவினர் நேற்று முன் தினம் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

இக் குழுவினர் இன்றும் நாளையும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலும் எதிர்வரும் 5ம் திகதி சனிக்கிழமை சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திலும்,எதிர் வரும் 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய பொலிஸ் நிலையத்திலும் விசாரணைகளை மேற் கொள்ளவுள்ளனர்.

விசாரணைக்கு சமுகமளிக்கும் முறைப்பாட்டுக்காரார்களை, பொலிஸ் முறைப்பாட்டுப் பிரதி,காணாமல் போனவரின் நிழற்படம்,இறப்புச் சான்றிதழ் என்பவறறையும் கொண்டு வருமாறும் முறைப்பாட்டுக்காரர்கள் அல்லது சாட்சிகள் வெளிநாடு சென்றிருந்தால் உறவினர் அது தொடர்பாக விசாரணைக்குழுவுக்கு அறிவிக்குமாறும் பொலிஸ் அத்தியட்சகர் கேட்டுள்ளார்.

எதிர்வரும் 5திகதி சனிக்கிழமை சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் இடம் பெறவுள்ள விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் விவரம் வருமாறு,

சி.பாலசிங்கம்-கைதடி,நுணாவில், கே.ரவீந்திரன்-இல.18,கோவில் கண்டி, கைதடி,பி.குணசேகரன்-இல.19,கோவிலடி மேற்கு,கைதடி.பி.பெரிலானல்-கைதடி தெற்கு.பி.சிவகுமார்-கைதடி வடக்கு,இ.அருந்தவகுமார்-கைதடி கிழக்கு,பா.சற்குணராசா-இல.33/1, அரியாலை தெற்கு,செ.ஜெகதீஸ்வரன்-இல.22,அல்லாரை தெற்கு, கு.பத்மரூபன்-இல.51/1.அரியாலை தெறகு,க.மகேந்திரன்மீசாலை மேற்கு, ஐ.ரகுபதி-நுணாவில் கிழக்கு,சாவகச்சேரி,கி.சந்திரகுமார்-பொது வாசகர் சாலையடி சரசாலை மத்தி சாவகச்சேரி.சி.விக்கினராஜா-கோவில் குடியிருப்பு சாவகச்சேரி,சி.இராமசாமி-மட்டுவில் தெற்கு சாவகச்சேரி,வி.பதுகலிங்கம-பேரம்பலம்சந்தி,சாவகச்சேரி, ச.கங்காதரன்-இல.396 மட்டுவில் தெற்கு சாவகச்சேரி. (உ)



### தமிழ் இளைஞர்...

யில் விண்ணப்பங்கள் கோரியிருந்தோம்.ஆனால் அதில் முழுமையான பயன்கிட்டவில்லை.

தமிழ் மாவட்டங்களில் கடமையாற்றுவதற்கு அதிகஅளவில் தமிழ் பேசக் கூடிய பொலிஸாரையே நியமித்துள்ளோம்.

அத்துடன் முறைப்பாடுகளும் விசாரணைகளும் தமிழ் மொழியிலேயே பதிவு செய்யப்படுகின்றன.

இந் நிலையில் பொலிஸாருக்கும் தமிழ் மக்களுக்குமிடையே நல்லுறவு ஏற்பட வேண்டும்.

விடுதலைப் புலிகளின் பொலிஸ் பிரிவான காவல் துறையினரை இலங்கைப் பொலிஸ் படையுடன் சேர்த்துக் கொள்வது பற்றிய முடிவையோ,முகமாலைச் சோதனைச் சாவடியில் பொலிஸாரின் கடமைகளை இராணுவத்தினர் செய்வது பற்றியோ நாம் எந்த முடிவையும் எடுக்க முடியாது. அது உயர் மட்டத்தோடு சம்பந்தப் பட்ட விடயம்.

பத்திரிகையாளர் பொலிஸாரால் தாக்கப்படுவது தொடர்பாக நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இச் சமபவங்கள் குறித்து பத்திரிகையாளர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்ய உரிமை உண்டு என்றும் பொலிஸ் மா அதிபர் ரி.இ.ஆனந்தராசா மேலும் தெரிவித்தார்.

இப் பத்திரிகையாளர் சந்திப்பில் டி.ஐ.ஜீ.கீர்த்தி கஜநாயக்கா,டி.ஐ.ஜீ. விதாரண,யாழ்.பொலிஸ் அத்தியட்சகர் கொட்ட தர்மசிறி,வட மாகாண பொலிஸ் அத்தியட்சகர் ஹொறல் அன்ரனி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை பொலிஸ்மா அதிபர் தான் கல்வி கற்ற பருத்தித் துறை ஹாட்லிக் கல்லூரிக்கும் நேற்று விஜயம் செய்தமை இங்கு குறிப் பிடத்தக்கது. (இ-4)

# துணிச்சலுடன் செயற்பட்ட பொலிஸாருக்கு பாராட்டு

(கொழும்பு)

கடந்த வருடம் டிசம்பர் மாதம் கொழும்பு ஐந்து லாம்புச் சந்தியில் ஏற்பட்ட தீ விபத்தின் போது அக் கட்டடத்தில் அகப்பட்டோரை மீட்கும் பணியில் துரிதமாகச் செயற்பட்ட கான்ஸ்டபிள் டபிள்யு.எச்.எம். எ.பி.மொறனவிவை பாராட்டும் விழா அண்மையில் நடை பெற்றது.

பொலிஸ் தலைமையகத்தில் நடைபெற்ற இவ் வைபவத்தின் போது பொலிஸ் மா அதிபர் ரி.இ.ஆனந்தராசா மேற்படி கான்ஸ்டபிளுக்கு ஒரு லட்சம் ரூபா பணத்தை பரிசாக வழங்கிக் கௌரவித்தார்.

(உ-8)



# பனை வள ஆராய்ச்சியாளரை பாராட்டி பொன்னாடை போர்த்தி கௌரவிப்பு

(தென்மராட்சி)

ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தின் இரசாயனவியல் துறைப் பேராசிரியர் ஜான்ஸ் பனை வள ஆராய்ச்சித் துறையில் கடந்த 10 வருடங்களாக ஈடுபட்டுள்ளமையைப் பாராட்டி நேற்று முன்தினம் பனை அபிவிருத்திச் சபையின் தலைமைக் காரியாலயத்தில் கௌரவிப்பு விழா இடம் பெற்றது.


சபையின பொது முகாமையாளர் எஸ்.கோகுலதாஸன் தலைமையில நடை பெற்ற இவ் விழாவில் பேராசிரியர் ஜானஸின் ஆராய்ச்சிப் பணிகளை பாராட்டி சபைசார்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவமகாராஜா பொன்னாடை போர்த்தக் கௌரவித்தார்.அத்துடன் சபையின் நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டது.

இவ்விழாவில் பேராசிரியரின் சேவையையும் ஆராய்ச்சியையும் பாராட்டி சுண்டிக்குளி சென்.ஜோன்ஸ் கல்லூரி அதிபர் எஸ்.தனபாலன்,யாழ். மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை,ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர் கோ.சி.வேலாயுதம் மற்றும் எஸ்.ஸி.எஸ்.சிதம்பரநாதன் ஆகியோர் உரையாற்றினர்.

பேராசிரியர் ஜான்ஸ் அங்கு குறிப்பிடுகையில், பனை பற்றிய ஆராய்ச்சியை நான் கடந்த 10 வருடங்களாக மேற் கொண்டு வருகின்றேன்.அதன் மூலம் பல நன்மைகளையும் புதிய கண்டு பிடிப்புக்களையும் செய்துள்ளேன் எனது ஆராய்ச்சிப் பணிக்கு பனை அபிவருத்திச் சபைபெரிதும் உதவியாக இருப்பது எனக்கு ஊக்கமளிப்ப பதாக இருக்கிறது எனக் குறிப்பிட்டார். (உ77)



பொலிஸ்மா அதிபர் ரி.இ.ஆனந்தராஜா நேற்றைய தினம் யாழ்ப்பாணம் வருகை தந்த போது எடுக்கப்பட்ட படங்கள் (படம்.பவன்)


ஈராக்கின் தெற்குப் பகுதியில் வாயு மற்றும் எண்ணெய் பிரித்தெடுக்கும் பகுதியில் ஏற்பட்டுள்ள தீப்பிளம்பு


பக்தாத்தில் சேதமடைந்துள்ள செய்தித்துறை அமைச்சகக் கட்டடம்


உம் கஸார் துறைமுகத்தில் சேதத்திற்குள்ளான கப்பல் நிறுத்தப்பட்டுள்ளது.


உம் கஸார் துறைமுகத்தில் ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ள கப்பல்


ஈராக்கிய பாலைவனப் பகுதியில் அமெரிக்க டாங்கிகள்


யுத்தத்தின் காரணமாக உணவிற்காக ஏங்கும் ஈராக்கியச் சிறுவர்கள்


ஈராக்கை நோக்கிப் பறக்கும் யு.எஸ் போர் விமானம்

# பிரி. பிரதமர் –ரஷ்ய அதிபர் ரெலிபோனில் உரையாடல்

(மாஸ்கோ)

ரஷ்யஅதிபர் விளாடிமீர் புடின், பிரிட்டிஷ் பிரதமர் ரோனிப் பிளேயர் இருவரும் தொலைபேசியில் திங்கட்கிழமை தொடர்பு கொண்டு பேசினர். கிரெம்ளின் மாளிகை விடுத்த அறிக்கை இதனைத் தெரிவிக்கிறது.

ஈராக்கில் மிகப் பெரிய அளவிலான மனிதாபிமான உதவித் திட்டத்தை ஐ.நா. மேற்கொண்டுள்ளதை வரவேற்பதாகவும் அந்த அறிக்கை தெரிவிக்கின்றது. பிரிட்டனுக்கு வரும் ஜூன் மாதத்தில் புடின் மேற்கொள் ளவுள்ள பயணம் உயர் அதிகாரிகள் நிலையில் இரு தரப்பும் அவ்வப் போது தொடர்பு கொள்வது உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து இரு தலைவர்களும் பேசினர். இரு நாட்டுக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் நிலவினாலும் சர்வதேச உறவில் ஐ.நா. அமைப்பு முக்கிய பங்காற்றி வருகின்றது என்பதில் மாறுபட்ட கருத்து இல்லை. இது திருப்தி அளிப்பதாக உள்ளது என அறிக்கை மேலும் கூறுகின்றது. (பி)

# நஜப் நகரில் தாக்குதல் 100 துணைப்படை கொலை 50 பேர் பிடிபட்டனர்

(நஜப்)

ஈராக் தலைநகர் பக்தாத்திலிருந்து 16 கி.மீ. தொலைவிலுள்ள முக்கிய நகரமான நஜப்பை அமெரிக்க படைகள் சுற்றிவளைத்துத் தாக்கியதில் 100 துணை இராணுவப் படையினர் கொல்லப்பட்டனர். 50 ஈராக் வீரர்கள் கைது செய்யப்பட்டனர்.

அமெரிக்க இராணுவத்தின் மத்திய கமாண்ட் திங்கட்கிழமை விடுத்த அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

துணை இராணுவம் குறித்து மேலதிக விபரம், பிடிபட்ட ஈராக் வீரர்கள் குறித்த தகவல் ஏதும் அதில் தெரிவிக்கப்படவில்லை.

நஜப் நகரைச் சுற்றி வளைத்துள்ள 101வது படைப் பிரிவினர் நடத்திய தாக்குதலில் புனித தலங்கள் சில சேதமுற்றன.

சுற்றிவளைத்து தாக்குதல் மட்டும் நடத்துவதா அல்லது உள்ளே நுழைவதா என்பதில் தெளிவான முடிவை எடுக்க இயலாத நிலையில் அமெரிக்கப் படை உள்ளது. இங்குள்ள ஈராக் வீரர்கள் அமெரிக்கப் படையின் பக்தாத் பயணத்திற்கு பெரும் சவாலாக உள்ளனர்.

இதற்கிடையே பஸ்ரா கால்வாயில் பிரிட்டிஷ்- ஈராக் படையினரிடையே மோதல் ஏற்பட்டது. ரோந்து சென்ற மூன்று ஈராக் படகுகள் பிரிட்டிஷ் படகை ராக்கெட் வீசித் தாக்கின. அதிலிருந்த வீரர்களில் நால்வர் காயமுற்றனர்.

பிரிட்டிஷ் படையினர் திருப்பித் தாக்கியதில் ஈராக் படகு ஒன்று மூழ்கியது.

வடக்குப் பகுதியில் பக்தாத் நகரை நெருங்கிக் கொண்டிருக்கிறது அமெரிக்க இராணுவம். தெற்கிலிருந்து பக்தாத் நோக்கிச் செல்லும் பிரிட்டிஷ் கடற்படை வீரர்கள் வழியில் ஈராக் படையினரைத் தேடிப்பிடித்துத் தாக்குதல் நடத்துகின்றனர். (பி)

# சீன சுரங்கத்தில் விபத்து; 16 பேர் பலி

(பெஜ்ஜிங்)

சீனாவில் ஏற்பட்ட சுரங்க விபத்தில் 16 பேர் இறந்தனர். மேலும் 10 பேர் வரை காணவில்லை.

சீனாவின் வடகிழக்கே லியாவ்னிங் மாகாணம் பு்.சன் நகரில் உள்ள நிலக்கரி சுரங்கத்தில் ஞாயிற்றுக்கிழமை அழுத்தம் காரணமாக எரிவாயு தீப்பற்றி வெடித்தது.

சம்பவம் நடைபெற்றபோது சுரங்கத்தில் 46 பேர் பணியாற்றிக் கொண்டிருந்தனர். விபத்து நடந்த இடத்திலேயே 16 பேர் இறந்தனர். 20 பேர் உயிர் தப்பினர். 10 பேரைக் காணவில்லை.

மீட்புப் பணிகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டன. விபத்திற்கான காரணம் குறித்து அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர்.

கடந்த 10 நாட்களில் சீனாவில் ஏற்பட்டுள்ள 2வது சுரங்க விபத்து இது. வடசீனா ஷான்ஜி மாகாணத்தில் மார்ச்-22ஆம் திகதி ஏற்பட்ட சுரங்க விபத்தில் 72 பேர் மாண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (பி)

# சரணடைதல் பற்றி மட்டுமே சதாமுடன் பேச முடியும்

## ரொனால்ட் ரம்ஸ்பீல்ற் கூறுகிறார்

(வாஷிங்டன்)

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைனின் நிபந்தனையற்ற சரண் தொடர்பாக மட்டுமே அமெரிக்காவும் பிரிட்டனும் சதாமுடன் பேச முடியும் என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் ரொனால்ட் ரம்ஸ்பீல்ற் கூறியுள்ளார்.

சதாம் ஹுசைனின் அரசாங்கத்துடனும் யுத்த நிறுத்தம் ஒன்றை அமெரிக்க தலைமையிலான படைகள் செய்து கொண்டுள்ளதாக ஈராக்கிய அரசாங்கம் வதந்தி பரப்பி விட்டுள்ளதாக ரம்ஸ்பீல்ற் குற்றம் சாட்டியுள்ளார்.

அவ்வாறான யுத்த நிறுத்தம் எவருடனும் செய்து கொள்ளப்பட வில்லை அவ்வாறு செய்து கொள்ளப்பட்டதாக ஈராக் அரசாங்கம் பொய் கூறுகின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார். (பி-2)


கூட்டணிப்படைகளிடம் சரணடைந்த ஈராக்கியர்கள் கையளித்த துப்பாக்கிகள் இவை


ஈராக் படைகளைக் குறிவைத்து தாக்கி வரும் அமெரிக்க பீரங்கி


அமெரிக்காவின் கைகளில் சிக்கிவிடக் கூடாது என்பதனால் எண்ணெய் கிணறுகளை தீவைக்கும் காட்சி


ஈராக் நோக்கி படையெடுத்துள்ள அமெரிக்க டாங்கிகள்


ஈராக்கில் எரிந்து கொண்டிருக்கும் எண்ணெய் கிணறுகளின் காட்சி


எரிந்து கொண்டிருக்கும் எண்ணெய் கிணறுகளினூடாகவும் முன்னேறும் அமெரிக்கப் படைகள்



அமெரிக்கப் போர் வீரர் ஒருவரும் யுத்தத்திற்கு தயாராகவுள்ள குண்டுகளும்


அமெரிக்கப் படையினரின் குண்டு ஈராக்கியரின் எண்ணெய் கிணறு


எஃப் ஏ-18 ஹோமட் விமானத்திலிருந்து ஏவுகணை வீசப்படுகிறது.

# பக்தாத்தைக் கைப்பற்ற 48 மணிநேரத்துக்குள் மூர்க்கமான தாக்குதல் ஆரம்பமாகும்

## அதிரடிப்படை வியூகத்தை ஊடறுத்து முன்னேற கூட்டுப்படை திட்டம்

(கட்டார்)

ஈராக்கின் தலைநகர் பக்தாத்தைக் கைப்பற்றுவதற்கான இறுதித் தாக்குதல் ஒன்றை அடுத்த 48 மணி நேரத்துக்குள் தொடுக்க அமெரிக்கத் தலைமையிலான கூட்டுப்படைகள் ஆயத்தமாகியுள்ளன என்று அமெரிக்க மத்திய படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பக்தாத் நகருக்கு தென் மேற்கே இப்புதிய தாக்குதல் தொடங்கப்படலாம். ஹர்பாலா நகருக்கு அருகே நிறுத்தப்பட்டிருக்கும் ஈராக்கின் அதிரடிப்படையினரின் பாதுகாப்பு அரண்களை தகர்த்துக் கொண்டு அமெரிக்கப் படைகள் பக்தாத்தை நோக்கி முன்னேறவுள்ளனர்.

பக்தாத்திற்குத் தெற்கே 80 கிலோமீற்றர் தொலைவில் ஹல்பாலா நகருக்கு அருகேயுள்ள ஈராக்கிய குடியரசு காவற் படையுடன் அமெரிக்கத்துருப்புக்கள் தற்போது சண்டையிட்டுவருதாக வாஷிங்டனில் அமெரிக்கப் பாதுகாப்பு அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

ஈராக்கிய குடியரசு காவல் படையுடன் அமெரிக்கப் படைகள் தரை வழி சண்டையிட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

பக்தாத்தில் அதிபர் சதாம் ஹுசைனின் மகனின் மாளிகை மீது அமெரிக்க போர் விமானங்கள் நேற்றுக் குண்டுகளை வீசியுள்ளதால் ஏற்பட்டுள்ள பெரும் புகை மண்டலத்தை நேற்றைய தினம் அல்ஜெசீரா தொலைக்காட்சி நேரடியாக ஒளிபரப்புச் செய்திருந்தது.


இதேவேளை, ஜோர்தானில் இருந்து பக்தாத்திற்கு அமெரிக்க ஐரோப்பிய மனிதாபிமான தொண்டர்கள் வந்த இரண்டு பஸ்களை அமெரிக்கப் போர் விமானப் படையினரால் தாக்கப்பட்டிருப்பதாக ஈராக்கியர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

புனித ஹர்பலா நகரை கூட்டுப் படைகள் சுற்றி வளைத்திருப்பதாகவும், இங்கிருந்து வடக்கு, மேற்கு திசைகளில் கூட்டுப்படை முன்னேறுவதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

நசீரியாவிலும் அதைச் சுற்றிய பகுதியிலும் ஈராக்கிய குடியரசுப் படைகளுடன் கடும் மோதலில் ஈடுபட்ட கூட்டுப்படைகள் ஈராக்கியரின் எதிர்ப்பு அரண்களை ஊடறுத்துக் கொண்டு முன்னேறுவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

### அரபு இஸ்லாமிய நாடுகளின் புதியமுயற்சி

ஈராக் போரைக் கண்டிக்கும் படி ஐ.நா. பாதுகாப்புச் சபையை இயங்க வைக்கும் முயற்சியில் தோல்வி கண்ட அரபு நாடுகளும், இஸ்லாமிய நாடுகளும் தற்போது இது குறித்து ஐ.நா. பேரவையில் விவாதிப்பதற்கும் இந்த விவாதத்தின் போது கூட்டுப்படைகளை வெளியேற வேண்டும் என்ற தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவதற்கும் ஆதரவு திரட்டி வருகின்றனர். (பி-2)



## எதிரிகளைக் கண்ட இடத்திலேயே சண்டை செய்யுங்கள்

### ஈராக் மக்களுக்கு சதாம் அறிவுறுத்தல்

(பக்தாத்)

புனித யுத்தம் ஓர் மதகடமை என்று ஈராக் ஜனாதிபதி சதாம்ஹுசைன் ஈராக்கிய மக்களுக்கு ஆற்றிய உரையில் கூறியுள்ளார்.

''ஆக்கிரமிப்பில் ஈடுபட்டுவரும் அமெரிக்க பிரிட்டிஷ் துருப்புக்களை கண்டவுடன் அந்த இடத்தில் யுத்தம் செய்யுமாறு" சதாம் மேலும் தெரிவித்துள்ளார்.

சதாமின் இச் செய்தியை தகவல் அமைச்சர் மொகமட் சயத் அல் சஹாப் தொலைக்காட்சியில் வாசித்தார்.

ஈராக்கிற்காக யுத்தம் செய்ய 6 ஆயிரம் தொண்டர்கள் ஈராக் வந்துள்ளதாகவும் இவர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் தற்கொலைப் போராளிகள் என்றும் ஈராக்கிய துணை ஜனாதிபதி தாகா ஜாசீர் ரமழான் நேற்று முன்தினம் தொலைக் காட்சியில் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### வெற்றியில் ஈராக் நம்பிக்கை

அமெரிக்கத் துருப்புக்களுக்கு எதிரான யுத்தத்தில் ஈராக் வெற்றி பெறும் என்று ஈராக் துணைப் பிரதமர் தாரிக் அஸீஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பாலைவன யுத்தத்தில் ஈராக் வெற்றி பெறுவதோடு யுத்தத்திற்கான அமெரிக்காவின் நோக்கங்களையும் தமது படைகள் தவிடு பொடியாக்கி விடும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அமெரிக்காவின் நோக்கங்கள் நிறைவேறாது தடுக்க முடிந்தால் அது ஈராக்கிற்கு வெற்றியைத் தருவது போலாகும் என்று அரபுலக செய்மதி வானொலி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் துணைப் பிரதமர் கூறியுள்ளார். (பி-2)



*உம்கஸார் துறைமுகம் மூடப்பட்டது:*

## கண்ணிவெடி அச்சத்தால் போக்குவரத்து இடைநிறுத்தம்

(கெய்ரோ)

ஈராக்கின் ஒரே ஒரு ஆழ்கடல் துறைமுகமான உம்கஸாரின் துறைமுகப் பணிகள் இன்னும் சீராக்கப்படாமையினாலும், மற்றும் கண்ணி வெடி அச்சுறுத்தல் காரணமாகவும் வர்த்தகக் கப்பல் போக்குவரத்திற்கு தற்போது திறந்துவிட முடியாதிருப்பதாக அமெரிக்க கடற்படை தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலியாவில் இருந்து கோதுமையை ஏற்றிவரும் இரு கப்பல்கள் வளைகுடாவில் தரித்து நிற்பதாகவும் கண்ணிவெடி அச்சுறுத்தல் காரணமாக இத்துறை முகத்திற்குள் இன்னமும் நுழைய முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்த இரு கப்பல்களிலும் ஒரு லட்சம் தொன் கோதுமை உள்ளது. இது அவுஸ்திரேலிய அரசு ஈராக்கிற்கு வழங்கியுள்ள உணவு உதவி ஆகும். ஈராக்கிற்கு முதலாவதாக கிடைத்துள்ள பெரியளவிலான உணவு உதவித் தொகுதியும் இதுவாகும்.

பிரிட்டனின் கடற்படை விநியோகக் கப்பலான ஷேர்கலகாட் மாத்திரமே தற்போது உம்கஸார் துறைமுகத்துக்குள் தரித்துள்ளது.

பல நாட்களாக துறைமுகத்துக்கு வெளியில் காத்திருக்கும் கப்பல் தீவிர கண்ணி அகழ்வுக்குப் பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை அங்கு நங்கூரமிட்டது.

இக்கப்பலில் ஈராக்கியருக்கு என்று மருந்து வகைகள், கம்பளிப் போர்வைகள், குடிதண்ணீர் ஆகியன வந்துள்ளன. (பி-2)

## கடல் கண்ணிகளைக் கண்டுபிடிக்க டொல்பின் மீன்கள் தருவிப்பு

(லண்டன்)

ஈராக்கிற்கு கடல் வழியாக உணவு மருந்து வகைகளைக் கொண்டுசெல்வதில் கடல் கண்ணிகள் தடையாக இருப்பதனால் இந்தப் பணியை சீராகச செய்வதற்கு டொல்பின் மீன்களைப் பயன்படுத்த கூட்டுப்படை அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

இதன்படி அமெரிக்காவிலிருந்து கடல் கண்ணிகளைக் கண்டுபிடித்து உதவக்கூடிய டொல்பின் மீன்கள் நீர்த் தொட்டிகள் மூலம் கொண்டு வரப்பட்டுள்ளன. இந்த மீன்களைக் கடலில் விடுவித்ததும் கடலில் கிடக்கும் கண்ணி வெடிகள் போன்ற பொருட்களை அவைகள் கண்டுபிடித்துவிடும் என்று கூறப்படுகின்றது. இந்த மீன்களின் உடலில் பொருத்தப்பட்டுள்ள நுண்அலை சமிக்ஞைக்கருவிகள் கண்ணி வெடிகள் இருக்கும் இடத்தை சமிக்ஞை மூலம் காட்டிக் கொடுத்துவிடும்.

இந்த மீன்களைப் பயன்படுத்துவதில் உள்ள ஒரேயொரு பின்னடைவு என்னவென்றால் ஏற்கனவே இப்பகுதியில் வசித்துவரும் இந்தவகை மீன்கள் புதிதாக வரும் மீன்களை தமது பகுதிக்குள் நுழைய விடாமல் துரத்திவிடக் கூடும் என்பது தான். (பி)

## ஈராக்கிற்கு 100 டொலர் உணவு ஐ.நா. அனுப்ப ஏற்பாடு

(நியூயோர்க்)

ஈராக்கிய மக்களுக்கு விநியோகிக்கவென 100 கோடி டொலர் பெறுமதியான அத்தியாவசியப் பொருட்கள் தயார் நிலையில் உள்ளதாகவும் மே மாத நடுப்பகுதியில் இப்பொருட்கள் ஈராக்கிய மக்களுக்கு விநியோகிக்கப்படலாம் என ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

யுத்தம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் உணவுக்கு எண்ணெய் என்ற திட்டத்தின் கீழ் ஈராக் இந்தப் பொருட்களை கொள்வனவு செய்திருந்ததாக ஐ.நா. ஸ்தாபனம் தெரிவித்திருந்தது.

பாதுகாப்புச் சபை கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய கூட்டத்தின் போது இந்த திட்டத்தின் கீழான ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனானிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதனை 45 நாட்களுக்குள் அவர் இப்பொருட் களை விநியோகிப்பது அவசியமாகும் என்று ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் கோபி அனானிடம கேட்டுக் கொண்டுள்ளது. (பி-2)

## ஈராக்கிய நிலைகள் மீது கூட்டுப்படை கடும் தாக்குதல்

(குவைத்)

குடியரசுப் படைகள் தற்கொலைப் படையினர் மற்றும் துணை இராணுவப் படையினர்களின் நிலைகளை அமெரிக்க பிரிட்டிஷ் படைகள் தொடர்ந்து தாக்கி வருகின்றன.

தெற்கு ஈராக்கில் மில்லா நகரத்தை கூட்டணிப்படை விமானங்கள் தாக்கியதில் 33 சிவிலியன்கள் உயிரிழந்து விட்டார்கள்.

போர் தொடங்கியது முதல் 589 பேர் கொல்லப்பட்டனர். 4500 பேர் காயமுற்றார்கள் என்று ரஷ்யாவிற்கான ஈராக்கிய. தூதர் அபாஸ் ஹலப் கூறியிருக்கிறார். ஏதுமறியா ஈராக்கிய மக்கள் கொல்லப்படுவது குறித்து ஐக்கிய அரபு எமிரேட்டும், மற்ற அரபு நாடுகளும் ஆழ்ந்த வருத்தம் தெரிவித்திருக்கின்றன.

வடக்கு ஈராக்கிற்கு படை வீரர்களையும், சாதனங்களையும் அனுப்ப பிரிட்டிஷ் படை விமானங்கள் முயன்றதை முறியடித்திருப்பதாக ஈராக் கூறியிருக்கின்றது.

### கொலின் பவல் அங்காராவிற்குப் பயணம்

இதனிடையே வட ஈராக்கிற்கு துருக்கி நாட்டின் வழியே அமெரிக்கப் படைகளை அனுப்ப அனுமதி மறுக்கப்பட்டதை அடுத்து துருக்கியுடனான கருத்து வேறுபாடுகளை அகற்ற அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜெனரல் கொலின் பவல் அங்காராவிற்கு புறப்பட்டிருக்கின்றார்.

வடக்கு ஈராக் நிலைமை குறித்து துருக்கியும், அமெரிக்காவும் ஒருமித்த கருத்து கொண்டிருக்கின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

### சவூதி அமைச்சர் சதாமுக்கு ஆலோசனை


போரை முடிவிற்குக் கொண்டுவர உதவிடும் என்றால் பதவி விலகலாம் என்று ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைனுக்கு தாம் அறிவுறுத்தியதாக சவூதி அரேபியாவின் வெளியுறவு அமைச்சர் இளவரசர் சௌதல் பைஷல கூறியிருக்கின்றார். நாட்டுக்காக தியாகம் செய்யுமாறு சதாம் ஹுசைன் தமது மக்களைக் கேட்டுக் கொண்டதால் அவர் தமது பதவியை தியாகம் செய்ய வேண்டும் என்று இளவரசர் சௌதல் பைஷல் மேலும் தெரிவித்தார். (பி-9)

## யு.எஸ். ஹெலிகொப்டர் வீழ்ந்து 3 வீரர் பலி

(வாஷிங்டன்)

அமெரிக்கக் கடற்படையைச் சேர்ந்த ஹெலிகொப்டர் ஈராக் தெற்குப பகுதியில் விழுந்து விபத் திற்குள்ளானது. இதில் 3 வீரர்கள் இறந்தனர். ஒருவர் காயமுற்றார். அமெரிக்க இராணுவத் தலைமையகம் பென்டகன் இதனைத் தெரிவித்துள்ளது.

ஹெலிகொப்டர் தற்செயலாக விழுந்து விபத்துக்குள்ளானதாக பென்டகன் செய்தித் தொடர்பாளர் லெப். கர்னல் டேவிட் லாபன் ஞாயிற்றுக்கிழமை இரவில் தெரிவித்தார். (பி)



### ஈராக் மீது போர் தொடுத்துள்ளஅமெரிக்கா

# புலிகளுடனான சமாதானப்பேச்சை

# தூண்டி வருவது வஞ்சனை மிக்கது

## படையினரைப் பாராட்டும் . விழாவில் ஜனாதிபதி சந்திரிகா வெஞ்சினம்

(கொழும்பு)



**பயங்கரவாதிகளை உருவாக்கும் பண்ணை என ஈராக்கை விமர்சித்து அதன் மீது போர் தொடுத்துள்ளஅமெரிக்கா, இலங்கையில் விடுதலைப்புலிகளுடன் சமாதானம் பேசும்படிதூண்டி வருவது வஞ்சனை ஆனது என்று ஜனாதிபதி பண்டாரநாயக்கா குமாரதுங் க ஜனாதிபதிமாளிகையில் கடந்த செவ்வாய் அன்று நடைபெற்றபடையினரைப் பாராட்டும் வைபவத்தில் தெரிவித்துள்ளார்.**

அங்கு தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி சமாதானத்தில் எனக்கு மிகுந்த பற்றுறுதி உண்டு. ஆனால் புலிகள் போர் செயற்பாடுகளில் ஈடுபடுவார்களாயின், மீண்டும் யுத்தத்தை முன்னெடுக்க நான் தயாராக இருக்கிறேன்.

கடந்த ஒன்றரை வருடங்களாக நான் இந் நிலைமைகளை உன்னிப்பாக அவதானித்து வருகின்றேன்.

ஆனால், ஐ.தே.மு. அரசாங்கம் தனது மனதில் என்ன தீர்வை நினைத்து இருக்கிறது என்பதை அது மக்களுக்கு அறிவிக்காமல் இருப்பது வேடிக்கையானது.

நாட்டின் இறைமையோ, ஆட்புல ஒருமைப்பாடோ ஆபத்துக்குள் [illegible] தில் ஜனாதிபதிக்குள்ள நிறைவேற்று அதிகாரங்களைப் பிரயோகிக்கத் தயங்கப்போவதில்லை என்றார்.

மேலும் வேறு அரசாங்கம் ஒன்று அமைக்கப்படுமாயின் நாமும் மாற்று நடவடிக்கைகள் பற்றி யோசிக்கவேண்டியிருக்கும் என்று புலிகளின்பேச்சாளர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்திருப்பதையும் கண்டித்தார்.

**யுத்தத்திற்குத் தீர்வு பேச்சு**

தொடர்ந்தும் உரையாற்றுகையில் உலகின் சகல யுத்தங்களும் பேச்சுவார்த்தைகளின் மூலம் தான் தீர்க்கப்பட்டிருக்கின்றன. நாட்டின் அபி விருத்திக்காக செலவிடப்பட வேண்டிய இளைஞர், யுவதிகளின் சக்தி யுத்தத்திற்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதை நினைக்கும்போது கவலையளிக்கிறது.

இலங்கை இராணுவத்துக்கு உண்மையில் 39ஆயிரம் படையினர் போதுமானது. ஆனால் வடக்கு-கிழக்கு பகுதிகளில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக இத் தொகை 1இலட்சத்து 56ஆயிரமாக அதிகரிக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது.

**தேவையற்ற யுத்தம்**

21ஆம் நுற்றாண்டில் தேவையற்ற அரசியல் யுத்தம் காரணமாக உயிர்ச்சேதம் ஏற்பட்ட 15 நாடுகளில் இலங்கையும் ஒன்றாகக்கருதப்படுகிறது.

தமிழீழ விடுதலைப்புலிகளினதும், மக்கள் விடுதலை முன்னணியினதும் பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாகவும் அரசாங்க ஆதரவிலான பயங்கரவாதம் மற்றும் போர் காரணமாகவும் தமிழ்- சிங்கள மக்கள் உயிரிழக்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

தொடர்ந்தும் உயர் வகுப்பில் இருந்து தலைவர்களை உருவாக்காமல் பொதுமக்களில் தலைவர் ஒருவரைத்தேர்ந்தெடுத்து மக்கள் நாட்டுக்குத் தரவேண்டும்.

**6 ஆம் சுற்றுப்பேச்சுக்களில் அடைந்த பயன் என்ன?**

வெளிநாடுகளில் 6ஆம் சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளபோதிலும், யுத்தத்திற்கு வழிவகுத்த சமூகப்பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகள் இரு தரப்புக்கள் மத்தியிலும் இன்னமும் இடம்பெறவில்லை.

எதிர்வரும் பேச்சுக்களின்போது மக்களின் பிரச்சினைகள் குறித்து ஆராயப்படவேண்டும் என்பதே சகல மக்களினதும் எதிர்பார்ப்பாகும் எனத்தெரிவித்தார்.

இவ்வைபவத்தில் படையினரின் 50 பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்களும் ரணவிருதிட்டத்தின் கீழ் 12 வீடுகளும் அன்பளிப்புச் செய்யப்பட்டன . (உ-7)

## ஜஸ்வர்ய ஹோமம்

(யாழ்ப்பாணம்)

ஸ்வர்ணயுக அமைப்பின் ஏற்பாட்டில ''ஐஸ்வர்ய ஹோமம்'' எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி முதல் 8.00 மணிவரை யாழ். வண்ணார் பண்ணை பெருமாள் ஆலயத்தில் வடக்கு வீதியில் உள்ள ஸ்ரீலக்சுமி நாராயண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப் புனித ஹோமத்தில் கலந்து அதன் பலாபலன்களை அனுபவிக்குமாறு அழைக்கப்பட்டுள்ளது. (உ-10)

# மல்லாகம் முகாமில் அடிப்படை வசதிகள் இன்றி

# 118 குடும்பங்கள் சொல்லொணாத்துன்பம்

### அல்லற்படும் மக்களை ஆற்றுவார் இல்லை

(தென்மராட்சி )

மல்லாகம் கோணல்புலம் முகாமில் தற்போது தங்கியுள்ள 118 குடும்பங்களைச் சேர்ந்த 448பேர்போதிய இருப்பிட வசதி, மலசலகூட வசதிமற்றும் நீர் வசதிகள் அற்ற நிலையில் பெரும் கஷ்டங்களுடன் வாழ்ந்து வருகின்றனர்.

இம்முகாமில் ஏற்கனவே 51குடும்பங்களைச் சேர்ந்த 191 பேர் மட்டுமே தங்கி இருந்த வேளை, தற்போது வன்னிப் பெருநிலப் பரப்பில் இருந்து வருகைதந்திருந்த 67 குடும்பங்களைச் சேர்ந்த 259பேரும் அங்கு தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதனால் முகாமில் இருக்கின்ற பௌதீக வளங்கள் போதியதாக இருக்காமையினால் அங்கு இருக்கும் ஆண்கள் ,பெண்கள் மற்றும் சிறுவர்கள் பல்வேறு நடைமுறைப்பிரச்சினைகளை நாளாந்தம் எதிர்நோக்கியுள்ளனர்.

வன்னிப்பெருநிலப்பரப்பில் இருந்து வந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் ஏற்கனவே அங்குள்ள 50 இற்கும்மேற்பட்ட நிரந்தரமற்ற குடியிருப்புக்களிலேயே பெரும் சிரமங்களுக்கு மத்தியில் வாழ்கின்றனர்.

இக்குடும்பங்களுக்கு புதிய வீடுகள் எதுவும் அமைப்பதற்கான முயற்சகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை எனவும் அறியப்படுகின்றது.

இமமுகாமில் ஏற்பட்டுள்ள இட வசதியின்மை . மற்றும்பௌதீக வசதியின்மைபற்றி அப்பகுதிக் கிராம சேவையாளரிடம் முகாம் குடும்பங்கள எடுத்துக் கூறியுள்ள போதிலும் எத்தகைய தீர்வும் மேற்கொள்ளப்படவில்லைஎன்பது குறிபபிடத்தக்கது. (உ-77)

## பரிசளிப்பும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தர்மகத்தா சபையினரால் நடததப்பட்டு வரும் அறநெறிப் பாடசாலையின் பரிசளிப்பு விழாவும், 'மருதடியான் மலர்' நூல் வெளியீட்டு விழாவும் எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணிக்கு மேற்படி ஆலய அன்னதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (உ-10)

## புத்தாண்டு தினத்தன்று அடையாள உண்ணாவிரதம்

(கொழும்பு)

களுத்துறைச் சிறைச்சாலைக் கைதிகள் சித்திரைபபுத்தாண்டு தினமான எதிர்வரும் 14ஆம் திகதி மீண்டும் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் இருக்கத் திட்டமிட்டுள்ளனர்.

அன்றைய தினம் மேற்படி சிறைசசாலையில் கறுப்புக் கொடிகள பறக்கவிட்டு துக்கதினம் அனுட்டிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை,கடந்த மாதம் 1ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை தொடர் உண்ணாவிரதம் மேற்கொண்ட சிறைக் கைதிகளில் பலரிற்கு குடற் புண் நோய் ஏற்பட்டுள்ளது.

இவர்களுக்குபிரத்தியேக உணவை வழங்குமாறு வைத்திய ஆலோசனை கூறப்பட்டபோதும் அதனை சிறைச்சாலை நிர்வாகம் ஏற்கவில்லை. இதனால் பாதிக்கப்பட்ட அரசியல் கைதிகள் மிகுந்த அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக மேற்படி கைதிகள் தமது உறவினர்களுக்கு கடித மூலம் அறிவித்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க, களுத்துறைச் சிறைக்கைதிகளுக்கென ஒருதொகைப் பணத்தினை வெளிநாட்டு நிறுவனம் ஒன்று தமிழ் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கையளித்திருந்ததாகவும் இதுவரை அந்தப் பணம் கைதிகளுக்கு கொடுக்கப்படவில்லை எனவும் கைதி ஒருவர் ஊடகவியலாளர் ஒருவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாகவும் தெரியவந்துள்ளது. (உ-10)

# புலிகளின்பகுதிகளில் பயிர்ச்செய்கைஆரம்பம்


(கொழும்பு)

. கல்குடாப்பகுதி முஸ்லிம் விவசாயிகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள தமது காணிகளில் விவசாயச் செய்கையில் நேற்று முதல் ஈடுபட்டுள்ளனர்

வாகனேரிப் நீர்பாசனத் திட்டத்தின் கீழ் முஸ்லிம் விவசாயிகளுக்கு சொந்தமான சுமார் 50ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில், தற்போது 2ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பிலே சிறுபோக நெற்செய்கையினை முஸ்லிம்கள் ஆரம்பித்துள்ளனர்.

கடந்த 10 வருடங்களாக நீர்ப்பாசன வாய்க்கால்கள் திருத்தப்படாதுள்ள காரணத்தால் முழு நிலப்பரப்பிலும் விவசாய செய்கையில் ஈடுபடமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

கொள்கைத்திட்டமிடல் அமைச்சின் ஆலோசகர் அலுசாகிர் மௌலானா, தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய பிரதிநிதிகளுடன் நடத்தியபேச்சுவார்த்தையினை அடுத்து முஸ்லிம் விவசாயிகள் மீண்டும் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதற்கான அனுமதி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-8)



**பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின்புதிய கட்டடத் திறப்பு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு -கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் து. விஜயலட்சுமி உரையாற்றுவதையும் பிரதேச சபை செயலாளர் இ.து.சிவராசா, கிளிநொச்சி மாவட்ட மேலதிகஅரசாங்க அதிபர் நா.வேதநாயகன், பளைப்பிரதேச செயலர் சு.புத்திசிகாமணி, கிளிநொச்சி மாவட்ட பிராந்தய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.தனபாலசிங்கம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.**

## நல்லூரின் நல்ல குருநாதர்

இன்று குருபூசை தினம்

**அருவாகி நின்ற ஆசான் நல்லூரில்**
**ஆசைகள் அற்ற மோனமுனி,**
**இல்லை என்று இயம்பாதவன்**
**ஈர்தென்னை ஆளும் எழில் நல்லூரில்**
**உண்மை முழுதும் என்பான்,**
**ஊரும்பேரும் இல்லான்,**
**எல்லா உலகமும் பரம்பொருளே,**
**ஏட்டில் எழுதிக் காட்டாதவன்**
**ஐம்புலன் அனைத்தையும் ஆட்கொள்ளுவான்,**
**ஒப்புயர் அற்றவன்**
**ஓங்காரத்தின் உட்பொருளானவன்**
**ஔவிய நெச்சத்தால் அறியாவொண்ணாதவன்**
**செல்லப்பன் திருவடி என்றும் வாழ்கவே**

**செந்தில் குமரன்அச்சுதன்**

# கொழும்புத் திட்ட மேம்பாட்டிற்கு 5 இலட்சம் அமெரிக்க டொலர்

## அஸ்லிவில்ஸ் வழங்கினார்

(கொழும்பு)

அமெரிக்க அரசாங்கம் கொழும்புத் திட்டத்தின் மேம்பாட்டிற்காக 5 இலட்சம் அமெரிக்க டொலர்களை நன்கொடையாக வழங்கியுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் போதைப் பொருள் பாவனை ஒழிப்புக்கு இப்பணம் பயன்படுத்தப்படும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அஸ் லிவில் ஸ் தெரிவித்துள்ளார்.

இந்நிதியை கொழும்புத்திட்டசெயலகத்தின் செயலாளர் நாயகம் டாக்டர் சரத்சந்திராவிடம் அஸ்லிவில்ஸ் நேற்று முன்தினம் கையளித்தார்.

ஆசியபசுபிக் பிராந்தியத்தில் போதைப் பொருட்பாவனையை ஒழித்துக் கட்டுவதற்காக கொழும்புத் திட்டம் பலவேறு திட்டங்களை முன்னெடுத்து வருவது குறிப்பிடத்தக்கது. (உ-8)

# முதல்வரின் உத்தரவை மேல் நீதிமன்று இரத்து

(கொழும்பு)

ஸ்ரீஜெயவர்த்தனபுர கோட்டை மாநகரசபை நடவடிக்கைக்களை இடைநிறுத்தி, அதனை ஆளுநா ஒருவரின் கீழ்கொண்டு வருமாறு மேல் மாகாண முதல்வர் விடுத்த உத்தரவை இரத்துச் செய்யுமாறு மேல் முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள ளது.

மாநகர சபையின் நடவடிக்கைகளை இடைநிறுத்த முன்பு நியாயமான சோதனைகளை நடத்தத் தவறியிருப்பதன் மூலம் முதல்வர் திட்டங்களை மீறியிருககிறார் என மேன் முறையீட்டு நீதிபதி எஸ். சிறிபவன் தெரிவித்துளளார்.

இருந்த போதிலும், மாநகர சபையின் நடவடிக்கைகள் குறித்து சோதனை செய்வதற்காக நீதிபதி ஒருவர் மூலம் விசாரணைகளை நடத்துவதற்கு முட்டுக்கட்டைகள் கிடையாது என நீதிமன்றம் மேலும் தெரிவித்துள்ளது.

கோட்டை மாநகர சபை நடவடிக்கைகளை இடைநிறுத்தும் தீர்மானத்திற்கு எதிராக மாநகர சபைத் தலைவர் றஞ்சித் ஹுரே வழக்குத் தாக்கல் செய்திருந்தமையும் இவ்வழக்கில் மேல மாகாண முதலமைச்சர் ஹெஜினோல்ட் ஹுரே, ஆணையாளர் உட்பட 5 பேர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

# கரவெட்டிப் பிரதேசத்தில் சட்டவிரோத மின்பாவனை

(கரவெட்டி)

கரவெட்டிப் பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெறுவர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப் படுகிறது.

குறிப்பாக கரவெட்டி கிழக்கு பகுதியில் உள்ள காளி கோவில் வீதி காட்டுப்புலம் முருகனாலய வீதி, ஞான வைரவர் வீதி ஆகிய பகுதிகளிலேயே இத்தகைய சட்டவிரோதமான மின்பாவனை இடம்பெறுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பல தடவை முறைப்பாடு செய்தும் இதுவரை உரிய நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர். (உ-33)

## வங்கி ஓய்வூதியர் நலன்புரிச் சங்க

# ஊக்குவிப்பு பரிசு வழங்கல் ஞாயிறன்று

(யாழ்ப்பாணம்)

வடமாகாண வங்கி ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தின் ஊக்குவிப்புப் பரிசுத் திட்டத்தின் கீழ் பரிசில் பெற தகுதி பெற்றவர்களுக்கான ஊக்குவிப்பு வழங்கும் வைபவம் எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு மக்கள் வங்கி- கன்னாதிட்டி தலைமைக் காரியாலயத்தில் வங்கி ஓய்வூதிய சங்கத் தலைவர் ஆர். சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி ஊக்குவிப்புப் பரிசில் பெறத் தகுதி பெற்றவர்களின் பெயர்கள் வருமாறு;

**தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை:**

வ. சில்வெஸ்டர் (2000ஆம் ஆண்டு)
சு. தாரணி (2001ஆம் ஆண்டு)

**க.பொ.த. (சா/த) பரீட்சை:**

இ.கேதாரசர்மா (2000ஆம் ஆண்டு)
பா. அகலிகா (2000ஆம் ஆண்டு)
க. கோபிநாத் (2001ஆம் ஆண்டு)
ம. மயூரா (2001ஆம் ஆண்டு)
வி. ஞானரூபன் (2001ஆம் ஆண்டு)

**க.பொ.த (உ/ த) பரீட்சை:**

ஜெ. வாசுதேவன் (2000ஆம் ஆண்டு)

வங்கியாளர் இறுதிப் பரீட்சை (ஏ.ஐ.பி) சித்தியடைந்து மேற்படி ஊக்குவிப்பு பரிசைப் பெற தகுதி பெற்றோர் பெயர்கள் வருமாறு;

கே. உலகநாதன், ஜி.சகாதேவன், எஸ். சிவபாதம், வி.எ. அச்சியகுமார், திருமதி பு. யோகராஜசிங்கம், வி. சிவானந்தன், எஸ். விமலச்சந்திரன், கே. ஸ்ரீபாஸ்கரன், கே. ஆனந்தராஜா, கே.பி. ஆனந்தநடேசன், இ. சிவராஜா, என்.பாலசுப்பிரமணியம், திருமதி ஜே.வைரவநாதன், என். சிவரட்ணம், ரி.ரகு, கே. ஆனந்தராஜா, ஏ.குகதாசன், எஸ். நித்தியானந்தன், ஏ. திருநாவுக்கரசு, திருமதி ஜே. சிவப்பிரகாசம், ஆர். சிவஞானசுந்தரம்பிள்ளை, எஸ். சூரியகுமார், எஸ். இரவீந்திரா, கே. விவேகானந்தராஜா, டீ. சிவராஜா.

**முதன்மை வங்கியாளர் (2002)**

ந. சிவரட்ணம் - முகாமையாளர் இலங்கைவங்கி, யாழ். 2ம் கிளை. (உ)


**கொக்குவில் இந்து மயான அபிவிருத்திச் சபை நிர்வாக சபை தெரிவிற்கான பொதுக் கூட்டம்**

மேற்படி பொதுக்கூட்டம் எதிர்வரும் 12.04.2003 ஆம் திகதி சனிக்கிழமை பிப. 3.00 மணிக்கு நல்லூர் பிரதேச சபை கொக்குவில் பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுளளது. குறிப்பிட்ட மயானத்தை உபயோகிக்கும் பொது மக்கள் அனைவரையும் தவறாது சமுகம் தந்து நிர்வாக சபைத்தெரிவுக்கு ஒத்துழைப்பு வழங்கி மயான அபிவிருத்திக்கு உதவுமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

பிரதேசசபை,
தலைமை அலுவலகம்,
திருநெல்வேலி.

செ.செல்வரட்ணம்
செயலாளர்
நல்லூர் பிரதேச சபை.

(C-5900)


## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் கைதாகி காணாமல் போனோர் பெற்றோர் பாதுகாவலர் சங்கத்தின் விசேட கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

மேற்படி சங்க அங்கத்தவர்களை தவறாது அன்றைய தினம் சமுகமளிக்குமாறு செயலாளர் எஸ். சறகுணம் கேட்டுள்ளார். (உ-4)

## "பலிக்களம்"

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் திருமறைக் கலா மன்றத்தினரால் வருடம் தோறும் மேடையேற்றப்பட்டு வரும் திருப்பாடுகளின் காட்சி "பலிக்களம்"என்னும் பெயருடன் இம்முறை பிரமாண்டமாக அரங்கேற்றப்படவுள்ளது.

இருநூற்றுக்கு மேற்பட்ட கலைஞர்கள் பங்கு கொள்ளும் இவ்வரங்காற்றுகை எதிர் வரும் 10-ம் திகதி .முதல் 13-ம் திகதி வரை மன்ற அரங்கில் நடைபெறவுள்ளது.

அருட்தந்தை பேராசிரியர் நீ.மரியசேவியரின் எழுத்துருவாக்கத்திலும் ஜி.பி.பேர்மினஸின் நெறியாள்கையிலும் உருவான இத்திருப்பாடுகளின் காட்சியில் கிறிஸ்து பிறப்பு, நற்செய்திப் பணி, பாடுகள், மரணம், உயிர்ப்பு என்பன தத்ரூபமாக சித்திரிக்கப்பட்டுள்ளன. (உ-59)

## யுவதிகளுக்கு தையல் பயிற்சி

(நவக்கிரி)

ஆவரங்கால் விவேகானந்தா இந்து இளைஞர் மன்றம் படித்து விட்டு வேலைவாய்ப்பு இன்றி இருக்கும் அப்பகுதி யுவதிகளுக்கு வேலைவாய்ப்பைப பெற்று கொடுக்கும் நோக்கில் இலவசதையல் பயிற்சி வகுப்பு நடாத்தப்படவுள்ளது.

இத் தையல் பயிற்சி நிலையத்தை யாழ் நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் அவர்கள். எதிர் வரும் 5-ம் திகதி சனிக்கிழமை சம்பிரதாய பூர்வமாக ஆவரங்கால் விவேகானந்தா பாலர் பாடசாலை மண்டபத்தில் திறந்து வைக்கவுள்ளார்.

மேற்படி பயிற்சி வகுப்பில் பங்கு கொள்ள விரும்பும் யுவதிகள் தமது விண்ணப்பங்களை சம்பந்தப் பட்ட முன்பள்ளி ஆசிரியரிடம் ஒப்படைக்குமாறு கேட்கப் பட்டுள்ளது. (உ-233)

## பாடசாலை பஸ் வழிமறிக்கப்பட்டது

(கோப்பாய்)

காலை சேவையிலீடுபடும் இ.போ.ச. வண்டியை வீதிக்குக் குறுக்காக தென்னமரக்குற்றிகள் போடப்பட்டு வழிமறிக்கப்பட்ட சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை காலை கோப்பாய் மானிப்பாய் வீதியில் கிருஷ்ணன் கோயில் முகாம் பகுதியில் நடைபெற்றது.

இப்பகுதியை சேர்ந்த குறுகியதூரம் செல்லும் மாணவர்களை நடத்துநர் பஸ்வண்டியில் ஏற்ற மறுப்பதாக கூறியே இந்நட வடிக்கை மேற்கொள்ளப் படுவதாக தலைமை தாங்கி நடாத்திவரும் இப்பகுதியை சாராத ஒருவர் தெரிவித்தார். இந்நடவடிக்கையினால் பாடசாலை மாணவர்கள் பலத்த அசௌகரியங்களை எதிர் நோக்கி யதுடன் உரிய நேரத்தில் பாடசாலை செல்ல முடியாது பரீட்சை நேரத்தில் இடையூறு களை எதிர் நோக்கியமையும் குறிப்பிடத் தக்கது. அரைமணி நேரம் வீதிப் போக்குவரத்தில் சிரமங்கள் ஏற்பட்டன. (பி.79)

## கத்தி வெட்டில் காயம்

(யாழ்ப்பாணம்)

காணித்தகராறினால் கத்தி வெட்டுக்கு இலக்காகிய ஒருவர் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை ஈச்ச மோட்டைப்பகுதியில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தை சேர்ந்த சங்கர் ஜெய விக்கிரமன் என்பவரே கத்தி வெட்டுக்கு இலக்கானவராவார். (த-6,72)

# வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை அதிகரிப்பு

## அமைச்சர் அஸ்வர் அறிவிப்பு

(கொழும்பு)

வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை ஆயிரத்து 400 மில்லியன் ரூபாவினால் அதிகரித்துள்ளதாக பாராளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம் அஸ்வர் தெரிவித்துள்ளார்.

ஈராக் யுத்தம் காரணமாக எரிபொருட்களின் விலை அதிகரித்துள்ளதை அடுத்து பெறோலியக் கூட்டுத் தாபனத்துக்கு ஏற்பட்டுள்ள நஷ்டத்தை ஈடுசெய்ய வேண்டிய நிலை அரசுக்கு ஏற்பட்டமையும், சில்லறை வர்த்தகம் மீதான பெறுமதி சேர்க்கப்பட்டவரி இடைநிறுத்தப்பட்டமையுமே இதற்கு காரணம் என்று மேலும் தெரிவித்த அஸ்வா,

இதனால், வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை இடைவெளியை குறைக்கும் நோக்கில் அத்தியாவசியத் தேவைகளுக்கான மீண்டெழும் செலவுகளை இரண்டு சதவீதத்தால் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு திறைசேரிக்குப் பணிப்பு விடுக்கப்பட்டுளளது.

ஆயினும், அனைத்து அரசாங்க ஊழியர்களுக்குமான சம்பளம், விசேட கொடுப்பனவு, ஓய்வூதியம், அரச கடனுக்கான வட்டி, சுகாதார சேவைபோன்ற அத்தியாவசிய தேவைகளுக்கான ஒதுக்கீடுகள் குறைக்கப் படமாட்டாதுஎனவும் அஸ்வர் சுட்டிக் காட்டினார். (உ-8)

## குழந்தையைக் கடத்தி

# சங்கிலியை அபகரிக்க முயன்ற கர்ப்பிணிப்பெண் சிக்கினார்

(யாழ்ப்பாணம்)

குழந்தையைக் கடத்தி அதன் தங்கச் சங்கிலியை அபகரிக்க முயன்ற கர்ப்பிணிப் பெண் கையும் மெய்யுமாகப் பிடிபட்டதுடன், எச்சரிக்கை செய்யப்பட்ட பின்னர் விடுவிக்கப் பட்டார்.

நேற்றைய தினம் யாழ். போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது;

ஆவரங்கால் புத்தூரைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் வைத்திய உதவிபெறும் பொருட்டு தனது இரு குழந்தைகளையும் வைத்திய சாலைக்கு அழைத்து வந்துள்ளார்.

மூத்த குழந்தையை வெளிநோயாளர் பிரிவில் இருக்கவிட்டு, அடுத்த குழந்தையை வைத்தியரிடம் காட்டிவிட்டு வந்து பார்த்தபோது குழந்தையை அவ்விடத்தில் காணவில்லை.

இதனால் பரபரப்படைந்த மேற்படி பெண்மணி தனது குழந்தையை அங்கு மிங்கும் தேடிய போது அப்பால் குழந்தையின் அழுகுரல் கேட்டதை அடுத்து அவ்விடத்துக்குச் சென்றபோது, குழந்தையை கடத்திச் சென்ற அந்தப் பெண், அதன் தங்கச் சங்கிலியை கழற்ற முயன்று கொண்டிருந்தது தெரியவந்தது.

பின்னர் அங்கிருந்தவர்கள் ஒன்றுகூடி குழந்தையை மீட்டதுடன் சம்மந்தப் பட்ட பெண்ணை வைத்திய சாலை காவலர்களிடம் ஒப் படைத்தனர். (உ-4)

# வலம்புரி-சங்குநாதம்

## எழுத்தாளர் சபை அங்குரார்ப்பண வைபவம்

காலம்: 05.04.2003 சனிக்கிழமை காலை 10.30 மணி

இடம் : வலம்புரி கேட்போர் கூடம்

தலைவர்: திரு.சி.வெற்றிவேலாயுதம்
*(நிர்வாக இயக்குநர்,வலம்புரி)*

பிரதம விருந்தினர்:மூத்த இலக்கிய கர்த்தா
*பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம்(நந்தி)*

சிறப்பு விருந்தினர்:உயர்திரு.என்.சரவணபவன்
*(பிராந்திய முகாமையாளர்,யாழ்.ரெலிகொம்)*

ஆசியுரை: அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார்
*(பிரதம ஆசிரியர், பாதுகாவலன்)*
பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
*(முன்னாள் துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)*

வரவேற்புரை: கவிஞர் சு.துரைசிங்கம்
*(ஓய்வுபெற்ற அதிபர், ஆசிரிய பீடம் வலம்புரி)*

சிறப்புரை: மூத்த எழுத்தாளர் கலாநிதி க.குணராசா
*(செங்கையாழியான்)*

கருத்துரை:

எழுத்தாளர் அறிமுகம்:

நன்றியுரை: திரு.மு.வாமதேவன்
*(செய்தி ஆசிரியர், வலம்புரி)*

**எழுத்தாளர் சபைக்கு விண்ணப்பித்தவர்களையும் ஆர்வலர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

15,வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்,
(யாழ். வைத்தீஸ்வரக் கல்லூரி அருகாமை)

வலம்புரிக் குடும்பம்

## சிறுவிளம்பரம்

### இசைக் குறிப்புகள்

Organ, வயலின் போன்ற எல்லா இசைக்கருவிகளுக்குமான சினிமாப் பாடல்களின் ''இசைக்குறிப்புகள்'' (பாகம்3) வெளிவருகின்றது. தொடர்பு: பி.பகல் 3மணியின பின், S.S.றஜீந்திரன்,75 கோவில்வீதி, நல்லூர். (கைலாச பிள்ளையார் கோவிலிலிருந்து 300m தெற்கே) T.P-077 7031293 (6878)


# நீர்வேலிக் கிராமத்தின் உயர்வுக்கு உழைத்த 'சமூகதுரை' அமரர் க.இராசதுரை ஆசிரியர்

'பெற்றதாயும் பிறந்த பொன்நாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே' என்பது பாரதிபாடல். இப்பாடலுக்கமையத் தனது பிறந்த பொன்னாட்டை நேசித்து கிராம முன்னேற்றத்துக்காக உழைத்தவரே அமரர் இராசதுரை ஆசிரியர். இவர் 1921ஆம் ஆண்டு ஜுன் மாதம் 1ந் திகதி நீர்வேலியில் வேலுப்பிள்ளை கந்தப்பிள்ளைக்கும் தெய்வானைக்கும் மகனாகப் பிறந்தார்.

அத்தியார் இந்துக்கல்லூரியில் தனது ஆரம்பக்கல்வியைக்கற்றதோடு,திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையில் தனது மேல்நிலைக் கல்வியைக் கற்றுதேறினார். பாலபண்டிதர் பரீட்சையில் சித்தயடைந்தார். திருநெல் வேலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலையிலும் பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஐயாவிடமும் கல்வி கற்று நன்மதிப்புப பெற்றுக் கொண்டார்.

### ஆசிரியப்பணி

கல்வியில் சிறந்த இவர் தான் கறற கல்வியை மற்றவர்களுக்கும் புகட்டவேண்டும்,தனது கிராம மக்கள் கல்வியில் வல்லவர்களாகத் திகழ வேண்டும் என்னும் பெருவிருப்பால், 1948ஆம் ஆண்டில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் கல்லூரி முகாமையாளர் முதலியார் அத்தியார் அருணாசலம் அவர்களினால் ஆசிரியராக நியமிக்கப்பெற்று தனது ஆசிரியப் பணியை ஆரம்பித்தார்.

### மறைந்தார் மாண்பு

ஆசிரியப்பணியின்போது மாணவர்களை அன்பினால் அணைத்துக் கல்விபுகட்டும் பாங்கைப் பாராட்டாதாரில்லை. கடமையுணர்ச்சி, பொறுப்புணர்ச்சி மிக்க சேவையின் சிறப்பினால் பகுதித்தலைவராக நியமனம் பெற்றுக்கொண்டார்.

தனது பதவிக்காலத்தில் மாணவ மன்றங்களூடாக மாணவரின் பேச்சாற்றல், எழுத்தாற்றல் ,மனனம் செய்யும் ஆற்றல்களை வளர்க்க ஊனறுகோலாக அமைந்துள்ளமை மறக்க முடியாததாகும்.

### அதிபர் பதவி

23வருடகாலம் அத்தியார் இந்துக் கல்லூரியில் ஆசிரியப்பணி செய்த இவர்,1-8-1971ல் வாதரவத்தை விக்கினேஸ்வர வித்தியாலயத்தின் அதிபராக நியமிக்கப் பெற்றார்.அங்கு தொடர்ந்து 8 வருடங்கள் அதிபராகப் பணி புரிந்து, 31-5.1979 ல் இளைப்பாறலானார்.

இவரது சேவையின் சிறப்பினால் இவர் 'ஆசிரியதிலகம்'எனக் கௌரவிக்கப்பட்டார்.

### சமூகப்பணி

நீர்வேலிக்கந்தசுவாமி கோயிலின் பரிபாலன சபையின் பொருளாளர்,செயலாளர் பதவிகளை வகித்துச் சேவையாற்றியதோடு, பத்து வருடங்களுக்கு மேலாக தலைவர் பதவியையும் வகித்து ஆலயவளர்ச்சிக்குப் பெரிதும் உதவியதோடு,மரபுதவறாது புராணபடனங்களும் செய்தமை மறக்க முடியாத சேவையாகும்.

அத்துடன், நீர்வேலி தெற்கு ஐக்கியநாணயசங்கம்,நீர்வேலி தெற்கு ஐக்கியபண்டசாலைச் சங்கம், சமுதாயமுன்னேற்றக்கழகம்,பாலர் பகல் விடுதி என்பனவற்றிலும் முக்கயமாகப் பொருளாளர், செயலாளர், தலைவர் பதவிகளை வகித்து அவற்றின் வளர்ச்சிக்குப பாடுபட்டமையும் குறிப்பிடத்தக்கது.

நீர்வேலிக்கிராமசபை உறுப்பினராகவும் உபதலைவராகவும் ஆறு ஆண்டுகள் பணிபுரிந்துள்ளார். நீர்வேலி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொருளாளர், செயலாளர்,தலைவர் பதவிகளை வகித்து கிராம அபிவிருத்திக்கு உழைத்தமை நினைவு கூறப்பட வேண்டியதாகும்.இதனால் கிராமபற்றுள்ள 'நீர்வை மகன்' என்றும் சமூகத்தில் பல அமைப்புகளின் தலை மைப்பதவிகள் வகித்துச் சேவை செய்ததால் 'சமூகதுரை' எனவும் கௌரவிக்கப்பட்டார்.

**சமூகசோதி**
**த.பரராஜசிங்கம் ஜே.பி.,**
**நீர்வேலி.**

### மறைவு

இப்படியான சேவையாளர்2003 மார்ச் மாதம்15ந் திகதி லண்டன் மாநகரில் இவ்வுலக வாழ்வை விட்டு நீங்கிவிட்டார்.இவரது இழப்பு நீர்வேலிக் கிராமத்துக்குப் பேரிழப்பாகும். இவரது பணியைத் தொடர்ந்து இவரது குடும்பததினரும் லண்டனல் நலன்புரிச் சங்கம ஒன்றை நிறுவி தமது கிராமத்து கல்விப்பணி, பொதுப் பணிகளுக்கு உதவி வருகின்றனர்.

## சமாதானம் வேண்டி பாதயாத்திரை செய்த முதியவர் யாழ்.வந்தார்

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கையிலிருந்து நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டி முதியவர் ஒருவர் பாதயாத்திரையாகப்புறப்பட்டு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்தடைந்தார்.

கடந்த மாதம் 23ஆம் திகதி தென்னிலங்கையில் இருந்து புறப்பட்டம.டேவற்(வயது -64)என்ற முதியவரே பாதயாத்திரையாக யாழ்வந்தவராவார்.

இவர் எடுத்து வந்த இரு குத்துவிளக்கில் ஒன்றை நல்லூர் கந்தசாமி ஆலயத்திற்கும், மற்றையதை யாழ்நாகவிகாரைக்கும் அனபளிப்பாகவழங்கியுளளாா. (இ7)

# இடம்பெயர்ந்து வன்னியில் வசித்துவந்த 41,598 குடும்பங்கள் குடாநாடுதிரும்பின

(திருநெல்வேலி)

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக யாழ்.குடாநாட்டில் இருந்து இடம் பெயர்ந்து வன்னிப்பகுதியில் வசித்து வந்த 41ஆயிரத்து 598 குடும்பங் களைச் சேர்ந்த 1இலட்சத்து 53ஆயிரத்து 742 பேர் மீளக்குடியமரும் நோக்கில் யாழ்.குடாநாட்டுக்கு திரும்பியிருப்பது திரட்டப்பட்ட புள்ளி விபரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி ஏ-9 கண்டி வீதி திறக்கப்பட் டதன் பின்னர், தரைவழிப்பாதையூடாக இவர்கள் குடாநாடு திரும்பியுள்ளனர்.

இடம்பெயர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தில் வசித்து வந்த 10 ஆயிரத்து 232 குடும்பங்களைச் சேர்ந்த 30ஆயிரத்து 460பேரும்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் வசித்து வந்த 2ஆயிரத்து 680 குடும்பங்களைச் .சேர்ந்த 6ஆயிரத்து 526 பேரும் இவ்வாறு மீளக் குடியமரும் பொருட்டு குடாநாட்டுக்கு வந்தவர்களில் அடங்குகின்றனர்.

இதேவேளை,41ஆயிரத்து 598 குடும்பங்களில் 60 வீதமானவர்கள் மாத்திரமே தமது வீடுகளில் மீளக்குடியமர்ந்துள்ளனர்.

ஏனைய 40வீதமான குடும்பங்களுக்கு மீளக்குடியமரும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது.

உயர் பாதுகாப்புவலையப்பிரதேசத்தில் இவர்களுடைய குடியிருப்புக்கள் அமைந்துள்ளன என்ற காரணத்தினாலேயே மீளக்குடியமர அனுமதிக்கப் படவில்லை என,யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் திருமதி திலகநாயகம் போல் தெரிவித்தார்.

வலி.வடக்கு,சாவகச்சேரி, மருதன்கேணிப்பகுதி மக்களுக்கே இவ்விதம்மீளக்குடியமர அனுமதி மறுக் கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-43)



நிரந்தர நியமனம்கோரி மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் பணிமனை முன் நேற்றுசுகாதாரத் தொண்டர்கள் மறியல்போர்.



மறியல் போரினால்உள்ளேசெல்லமுடியாது பணியாளர்கள் வீதியில் குழுமிநிற்கும் காட்சி படங்கள்: க.பவன்

## இலங்கையரிடம் போதைப்பொருள்

(புதுடில்லி)

இலங்கையைச் சேர்ந்த ஒருவரிடம் இருந்து 10கிலோ நிறையுடைய ஹெரோயின் போதைப் பொருளை, இந்தியப்போதைப் பொருள் தடுப்புப்பிரிவு அதிகாரிகள் சென்னையில் வைத்து மீட்டுள்ளனர்.

இது சர்வதேச சந்தையில் 10கோடி ரூபா பெறுமதியுடையது என தெரிவிக்கப்படுகிறது. (ந-5)

## தடகள விளையாட்டுப்போட்டி

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேச செயலா பிரிவுக்குப்ப் விளையாட்டுக் களகங்களுக்கிடையிலான தடகள விளையாட்டுப்போட்டிகள் கடந்த வாரம் நடைபெற்றன.

மட்டுவில் தெற்கு கேடில்ஸ் விளையாட்டு மைதானத்தில் பிரதேசசெயலர் க. கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இன் நிகழ்வில் பிரதமவிருந்தினராக மேலதிக அரசாங்க அதிபர் திருமதி போல் பத்தினியம்மாவும், கோப்பாய்ப் பிரதேச செயலர் க. ஸ்ரீனிவாசன் சிறப்புவிருந் தினராகவும் பங்குகொண்டனர்.

இருபத்தைந்துக்கு மேற்பட்ட கழகங்கள் பங்குபற்றிய இப்போட்டிகளில் மட்டுவில் தெற்கு வளர்மதி விளையாட்டுக் கழகம் 45 புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். (உ-77)

## வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். அத்தியடி அருள்மிகு ஸ்ரீ சிதம்பர நடராஜா வீரகத்திப் பிள்ளையார் ஆலைய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

10 நாட்கள் தொடர்ந்து நடைபெறும் இவ் உற்சவத்தில் எதிர் வரும 14 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்த உற்சவமும் இடம் பெறவுள்ளது. (உ-10)

## ஈராக் மக்களுக்கு இலங்கைத்தேயிலை அன்பளிப்பு

(கொழும்பு)

ஈராக் மக்களுக்கு தேயிலையை அன்பளிப்பாக வழங்குவது குறித்து, பரிசீலிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பெருந்தோட்டத் துறை அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லாவைக் கேட்டுள்ளார்.

ஈராக்மீதான அமெரிக்காவின் தாக்குதலினால் இலங்கைத் தேயிலை ஏற்றுமதியில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிக்குத் தீர்வு காண்பது குறித்து அரசாங்கம் தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.

அத்துடன்,தேயிலை ஏற்றுமதி வீழ்ச்சியினால் பல மில்லியன்கள் பெறுமதியான தேயிலைகளஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. (உ-10)

## முஸ்லிம் எம்.பிக்கள் 7ஆம் சுற்றுப்பேச்சுக்கு முன் பாலாவை லண்டனில் சந்திப்பர்

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு மாகாண முஸ்லிம் எம்.பிக்கள் ஒன்றியம் தமிழீழவிடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை சந்திக்க விரைவில் லண்டன் செல்லவுள்ளது.

இச்சந்திப்புக்குறித்த திகதி இன்னும் நிர்ணயிக்கப்பட வில்லையாயினும் அரசிற்கும் புலிகளுக்கும் இடையிலான 7 ஆம் சுற்றுப பேச்சுவார்த்தைக்கு முன்னர் இவர்கள் பாலாவை சந்திப்பார்கள்என நம்பப்படுகிறது.

இதற்கான ஏற்பாடுகளை கொழும்பில் உள்ள நோர்வேத்தூதுவர் ஜோன்வெஸபேர்க் மேற்கொண்டு வருகிறார்.

இதன் பிரகாரம் கடந்த புதன்கிழமை வடக்கு-கிழக்கு மாகாண முஸ்லிம் எம்.பிக்களின் ஒன்றியத்தின்முக்கியஸ்தர்களை,ஜோன்வெஸ்பேர்க் சந்தித்து பேசியுளளார்.

இதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம் பிரதி நிதிகளும் கலந்து கொள்வதற்கு அனுமதிக்கப்படும் என உறுதியளித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-10)

## மூவினக் கலைஞர்கள் சங்கமிக்கும் முத்தமிழ்விழா திருகோணமலையில்

(திருகோணமலை)

தமிழீழ விடுதலைப்புலிகளின் கலைபண்பாட்டுக்கழ்கத்தினரால் நடத்தப்படவுள்ள முத்தமிழ்விழா, எதிர் வரும் 8அம் திகதி முதல் 12ஆம் திகதி வரை திருகோணமலை உவர்மலை விவேகானந்தா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் இலங்கையில் வாழும் மூவினக்கலைஞர்களும் பங்கேற்கவுள்ளதுடன், இந்தியக் கலைஞர்களும் இந் நிகழ்வில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

5 நாள் நடைபெறும் இவ்விழாவில் பிரபல நாடகங்கள் பல மேடையேற்றப்படுவதுடன், நுண்கலை பீடமாணவர்களின் இசை, நடன நிகழ்வுகளும் நடை பெற ஏற்பாடாகி உள்ளது.

இதேவேளை,தமிழீழ விடுதலைப் புலிகளின் கலைபண்பாட்டுக் கழகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மேற்படிவிழா, சென்ற மாத நடுப்பகுதியில் நடைபெற விருந்தமையும் பின்னர் ஒத்தி வைக்கப்பட்டிருந்ததும் தெரிந்ததே. (உ-10)

## தனியார் வானுக்கு தீயிடப்பட்டது

(கொழும்பு)

கொழும்பு ஆமர் வீதியில நேற்று முன்தினம் இரவு 9.15 மணியளவில் தனியாருக்குச் சொந்தமான வான் ஒன்று அடித்து நொருக்கப்பட்டதுடன்,தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

வீதியை கடக்க முறபட்ட இரு பெண பிள்ளைகளை வான் மோதியதை அடுதது, கோபாவேசமடைந்த பொது மக்களே வானைத் தாக்கியுள்ளனர். (இ)

# இன்று ஒரு தகவல்

## அனுசரித்துப் போவது எப்படி?

''அடுத்தவர்களை அனுசரித்து நடந்து கொள்ளத் தெரியவில்லை. அவன் என்ன சார் மனிதன்?'' என்று சிலரைப் பற்றிச் சொல்வதுண்டு. சக மனிதர்களோடு எப்படிப் பழகுவது என்று தெரியாததனாலேயே பலர் இன்று சங்கடப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். வசதி வாய்ப்புகள் சரியாக இருக்கும். வாழ்க்கை சரியாக இருக்காது. இன்னொருவரிடம் எப்படிப் பேசுவது... பழகுவது என்பது தெரியாததனாலே தான் இந்த அவஸ்தை. இந்த அவஸ்தையின்றி வாழ்வதற்கு அனுபவ சாலிகள் சில வழிமுறைகளைச் சொல்கிறார்கள். அவை என்னவென்பதை இப்பொழுது தெரிந்து கொள்வோம்.

முதலில் நமது நாவானது நமது கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். வார்த்தைகளைக் கொட்டி விட்டுப் பின் அள்ள முடியாமற் கிடந்து கஷ்டப்படக் கூடாது. எப்படிப் பேசுகிறோம் என்பதும் முக்கியம். பேசுகிற போது எப்படி முகத்தை வைத்திருக்கிறோம் என்பதும் முக்கியம். அன்பாகப் பேசினாலும் நன்றாக இருக்கும். அப்படிப் பேசுகிற பொழுது ஆதரவாக அவர் தோளின் மேல் ஒரு கையைப் போட்டுப் பேசினால் இன்னும் நன்றாக இருக்கும்.

இரண்டாவது விஷயம் இன்னொருவரிடம் பேசுகிற பொழுது வாக்குறுதிகளை அள்ளிவீசக் கூடாது. கொடுக்கிற வாக்குறுதி குறைவாக இருக்க வேண்டும். அப்படிக் கொடுத்த வாக்குறுதியைக் கண்டிப்பாக நிறைவேற்ற வேண்டும். நாம் ஒருவரைப் பாராட்டுகிறோம். அல்லது அவரைப் பற்றி அபிப்பிராயம் சொல்கிறோம் என்றால் அது ஆக்க பூர்வமாக இருக்க வேண்டும். நமது பாராட்டு அல்லது விமர்சனம்மற்றவருடைய முன்னேற்றத்துக்கு உதவுவதாக இருக்க வேண்டும். நாம் சொல்வதைக் கேட்டு விட்டு அவர் தலையிலே கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விடக் கூடாது. எப்பொழுதும் உற்சாகமாக இருக்க வேண்டும். முகம மலர்ச்சியாக இருக்க வேண்டும். மனிதனாக இருந்தால் வருத்தம், கவலை, ஏமாற்றம் எல்லாம் இருக்கத்தான் செய்யும். அவை மனதில் இருக்கட்டும்.

அந்த வருத்தமும் -கவலையும்-ஏமாற்றமும் சேர்ந்து கொண்டு நமது முகத்திலிருக்கிற மலர்ச்சியை மூடி மறைப்பதற்கு நாம் இடம்கொடுத்து விடக் கூடாது. எந்த விஷயத்தைப் பற்றி யாரிடம் பேசினாலும் வெளிப்படையாகப் பேச வேண்டும். திறந்த மனதோடு பேசவேண்டும். மூடி மறைத்து மென்று விழுங்கிக் கொண்டு இருக்கக் கூடாது. இன்னொருவரிடம் பேசுகின்ற பொழுது விவாதம் பண்ணுங்கள். அது தப்பு இல்லை. ஆனால் வாதாடிக் கொண்டிருக்காதீர்கள். அதாவது விவாதிக்கலாம் வாதாடக் கூடாது.

நம்மிடம் இருக்கிற நல்ல குணங்களை நாம் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது. அந்தநல்ல குணங்களே நம்மைப் பற்றி எடுத்துச் சொல்ல வேண்டும். அப்படி நடந்து கொள்ள வேண்டும். அதே மாதிரி மற்றவர்களிடம் உள்ள கெட்ட குணங்களைப் பற்றி அவசியமில்லாமல் நாம் பேசவேண்டியதில்லை. உங்களைப் பற்றி யாராவது தப்பாகப் பேசுகிறார்களா? அப்படி அவர்கள் பேசுவதில் உண்மை இல்லையா? அப்படியென்றால் அதை நீங்கள் பொருட்படுத்த வேண்டாம். விட்டு விடுங்கள். அது தானாகப் போய்விடும். ஒரு நாலைந்து பேருடன் பேசிக் கொண்டிருக்கிறீர்களா? எல்லோருக்கும் முக்கியத்துவம் கொடுங்கள். யாரையும் அலட்சியப் படுத்தாதீர்கள். தமாஷாகப் பேசலாம். ஆனால் உங்கள் தமாஷ் மற்றவர்களைக் கேலி பண்ணுவதாக இருக்கக் கூடாது.

நமக்குக் கிடைக்க வேண்டியது கிடைக்கவில்லையே என்கின்ற தவிப்பு நம்மிடம் இருக்கக் கூடாது. அது தேவையில்லை! உங்கள் செயற்பாடுகள் தெளிவாக இருக்கட்டும். பாராட்டு தானாக உங்களைத் தேடிக் கொண்டுவரும். இன்னொருவருடைய மனதிலே கௌரவமான ஓர் இடத்தைப் பிடிக்க வேண்டுமென்றால் நாம் இந்தக் குணங்களையெல்லாம் நம்மிடம் வளர்த்துக் கொள்ள வேண்டும். இவைகள் அனுபவசாலிகள் சொல்லியிருக்கிற குறிப்புகள். இந்தக் குறிப்புகளைச் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். அது முக்கியம். தப்பாகப் புரிந்து கொண்டால் என்ன ஆகும் தெரியுமா? இதைக் கேளுங்கள்.

ஒருவர் வந்தார். ''சாா! மற்றவர் தோள் மீது கையைப் போட்டுக் கொண்டு அன்பாகப் பேச வேண்டும் என்று சொன்னீர்கள். அப்படித் தான் பேசினேன். அவரின் முதுகைக் கூடத் தட்டிக் கொடுத்தேன். என் வேலை போய் விட்டது சாா; வீட்டுக்கு அனுப்பி விட்டார்கள'' என்றார். யாரிடம் அப்படிப் பேசினீர்கள்? என்று கேட்டேன். மிகவும் சோகமாக ''என் முதலாளியிடம் சாா'' என்றார்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்.

## விசேட குழுவின் பதவிக் காலத்தை நீடிக்க அங்கீகாரம்

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் ஆணைக்குழு உறுப்பினர் பதவியில் இருந்து கிங்ஸ்லி விக்கிரம சூரியாவை நீக்குமாறு ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்ட யோசனை தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட விசேடகுழுவின் பதவிக் காலத்தை மே மாதம் 31ஆம் திகதி வரை நீடிக்க பாராளுமன்றம் நேற்று முன்தினம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

விசேட குழுவின் பதவிக் காலத்தை நீடிக்குமாறு கோரும் பிரேரணையை சபை முதல்வர் டபிள்யூ. ஜே.எம்.லொக்கு பண்டார முன்வைத்ததை அடுத்தே இதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவினால் நியமிக்கப்பட்ட பாராளுமன்ற விசேட குழுவுக்கு விசாரணை அறிக்கையை சமர்ப்பதற்கு கடந்த பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி வரை காலஅவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

பாராளுமன்ற நியாயப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்ட ஜனாதிபதியின் யோசனையின் பிரகாரம் மேற்படி அறிக்கை சமர்ப்பிக்க காலம் போதாதென்று சபைமுதல்வர் சபையில் சுட்டிக் காட்டிஅதனை நீடிக்குமாறு யோசனை முன் வைத்தார்.

இதனை அடுத்து இதற்கான அங்கீகாரத்தை பாராளுமன்றம் கடந்த திங்கட்கிழமை வழங்கியது.(உ-8)

## வாழைச் சேனை-மட்டு ரயில் சேவை ஆரம்பம்

(மட்டக்களப்பு)

வாழைச்சேனையில் இருந்து மட்டக்களப்புக்கான ரயில் சேவை எதிர்வரும் 12ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கென 32 கிலோ மீற்றர் நீளமான ரயில்பாதை 17 கோடி ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது. இதில் 10 கோடி ரூபாவை நோர்வே அரசு வழங்கியுள்ளது.

இப்பாதையை போக்குவரத்து அமைச்சர் உபாலி பியசோம வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

மட்டக்களப்பு-கொழும்பு ரயில் சேவை 1996ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதியுடன் இடை நிறுத்தப்பட்டது.

புரிந்துணர்வு உடன் படிக்கையினை அடுத்து மட்டக்களப்பு-கொழும்பு ரயில் சேவை கடந்த வருடம் மார்ச் மாதம் வாழைச்சேனை வரை விஸ்தரிக்கப்பட்டது குறிப்பிடத் தக்கது. (உ-8)

## 2 வது உலக இந்து மாநாட்டை ஒட்டி

# மாணவர்களிடையே நடத்தப்பட்ட பேச்சு,பண்ணிசைப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ். பிராந்திய அலுவலகத்தினால் யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டி, பண்ணிசைப்போட்டி ஆகியவற்றின் முடிவுகள் வெளியிடப் பட்டுள்ளன.

முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்கள் கொழும்பில் நடைபெறும் தேசிய மட்டப் போட்டியில் கலந்து கொள்ளத் தகுதி பெற்றுள்ளனர்.

தேசிய மட்டத்தில் இப் பண்ணிசைப் போட்டி இம் மாதம் 10 ஆம் திகதி வியாழக்கிழமையும், மறுநாள் பேச்சுப் போட்டியும் கொழும்பு-4 பம்பலப்பிட்டி லோறன்ஸ் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற வுள்ளன.

மாவட்ட ரீதியாக நடைபெற்ற போட்டிகள் ஒவ்வொன்றிலும் முதல் ஆறு இடங்களையும் பெற்ற மாணவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் நடைபெறும் மாநில மகாநாட்டில் பரிசுகள் வழங்கப்படும்.

போட்டிகளில் முதல் 6 இடங்களையும் பெற்றவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

### பேச்சுப் போட்டி

*கீழ்ப்பிரிவு*

| | |
|---|---|
| ப.உபேந்திரா | யாழ்.மத்திய கல்லூரி |
| ப.டிலானி | சாவகச்சேரி இந்துக் கல்லூரி |
| கு.கோபிகா | யாழ்.இந்து மகளிர்கல்லூரி |
| யோ.கார்த்திகா | மகாஜனாக் கல்லூரி |
| ச.கீரன் | வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி |
| சி.பரிபூர்னா | யூனியன் கல்லூரி |

*மேற்பிரிவு*

| | |
|---|---|
| கு.குருபரன் | யாழ்.இந்துக் கல்லூரி |
| தே.டசிகா | சுண்டுக்குளி மகளிர் கல்லூரி |
| செ.சுரேஸ்கரன் | ஸ்கந்தவரோதயாக்கல்லூரி |
| க.கலைவாணி | வைத்தீஸ்வராக் கல்லூரி |
| போ.சித்திரா | கொக்குவில் இந்துக் கல்லூரி |
| து.தூகாஜினி | உடுப்பிட்டி மகளிர் கல்லூரி |

*மத்திய பிரிவு*

| | |
|---|---|
| ம.மயூரா | வேம்படி மகளிர் கல்லூரி |
| க.கலையரசி | அச்சுவேலி புனிததிரேசா மகா வித்தியாலயம் |
| தெ.ஹர்சன் | யாழ்.மத்திய கல்லூரி |
| யோ.சுதாகரன் | யூனியன் கல்லூரி |
| க.விஜயராஜ் | யாழ்.மத்திய கல்லூரி |
| ம.விஜிதரன் | ஸ்கந்தவரோதயாக் கல்லூரி |

### பண்ணிசைப் போட்டி

*கீழ்ப்பிரிவு*

| | |
|---|---|
| தெ.பவனுஜா | வேம்படி மகளிர் கல்லூரி |
| சே.கோபிகா | மானிப்பாய் மெமோரியல் ஆங்கில பாடசாலை |
| தே.விதுர்ஷன் | கொக்குவில் இந்துக் கல்லூரி |
| சி.பிரபூர்னா | யூனியன் கல்லூரி |
| சு.அம்பிகா | இராமநாதன் கல்லூரி |
| ஜெ.சந்துருகேசன் | யூனியன் கல்லூரி |

*மத்திய பிரிவு*

| | |
|---|---|
| கு.ஜெகதீசன் | யூனியன் கல்லூரி |
| ம.தயாபரன் | யாழ்.மத்திய கல்லூரி |
| ஜெ.வைஷ்ணவி | மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலை |
| வி.ஜிவிகா | யூனியன் கல்லூரி |
| த.கவாஸ்கர் | யாழ்.இந்துக் கல்லூரி |
| அ.அமிர்தலோஜன் | கொக்குவில் இந்துக்கல்லூரி |

*மேற்பிரிவு*

| | |
|---|---|
| ந.தனசொரூபி | கொக்குவில் இந்துக் கல்லூரி |
| கோ.சிவராஜா | பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி |
| சு.கபிலன் | ஸ்கந்தவரோதயாக்கல்லூரி |
| வி.நளாயினி | யூனியன் கல்லூரி |
| மு.கௌசலா | யூனியன்கல்லூரி |
| பு.சுகன்யா | புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தாக்கல்லூரி(உ) |

## ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ். மாவட்ட பிராந்திய அலுவலகம் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடத்தி வரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில், நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு நல்லூர் நாவலர்மணி மண்டபத்தில் யாழ் வலயக் கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர் திருமதி பா.பாலசிங்கம் ''சைவநெறி காட்டும் மனித விழுமியங்கள்'' என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (உ-10)

## இராசி பலன்

**03.04.2003**

**(பங்குனி 20,வியாழன்)**

துதியை வை 5.17 வரை
அச்சுவினி பி.இ. 4.01 வரை
இராகு காலம் - 1.40-3.10
சுபநேரம் - 7.40-9.10
அமிர்த சித்தம்,செல்லப்பா சுவாமிகள் குருபுசை

**மேடம்**
ஜனவசியம், நல்ல முயற்சி,போசன சுகம், புதிய சிந்தை.

**இடபம்**
அலைச்சல் ,சுபசெலவு, மேன்மை, அமைதிக் குறைவு.

**மிதுனம்**
கௌரவமான நிலை,தொழில்நிலை மாற்றம், குடும்பசுகம், முயற்சி கைகூடும்.

**கடகம்**
கடுமையான பிரயாசை, தூரதேசச் செய்தி, பிறர் உதவி, அதிக யோசனை.

**சிங்கம்**
மனச்சஞ்சலம், பெரியோரால் வெறுக்கப் படல், காரிய தாமதம், கட்டுப்படுத்தல்.

**கன்னி**
எதிர்பாராத பிரச்சினை,பிரயாண பயம், உறவினர் சந்திப்பூ காரிய தடங்கல்.

**துலாம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, குடும்பத்தில் மகிழ்ச்சி, போசனநன்மை, உடல்நலம்.

**விருச்சிகம்**
மனமகிழ்ச்சி, காரிய அனுகூலம், தனவரவு, உடல்நலம்.

**தனுசு**
சிறுவியாதி, மனச்சஞ்சலம், செய்தொழில் விருத்தி, பெண்சகோதரர் உதவி.

**மகரம்**
ரோகபயம்,வேலைச்சுமை, காரிய தாமதம், மாதர் நட்பு.

**கும்பம்**
கூட்டுமுயற்சி, காரிய நன்மை, பிறர் உதவி, புதிய பொருள் சேர்க்கை.

**மீனம்**
வாக்குக் கலகம், அதிக செலவு, காரிய தாமதம், உறவினர் சந்திப்பு.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்.

## அன்பினால் அகிலத்தை ஆழலாம் போரினால் பார் அழிவடையும்

### சுவாமி சித்ரூபானந்தா உரை

(தென்மராட்சி)

இன்று உலகில் பிணக்குகளால், வேற்றுமைகளால் ஒரு யுத்தமே நடந்து கொண்டிருக்கிறது. பலர் இறந்து விட்டார்கள். ஒரு நாட்டின் பாரம்பரியமான கலாசாரம் அழிந்து கொண்டிருக்கின்றது. இதேபோல நமது நாட்டிலும் பல ஆண்டுகளாக நடந்த இனப்போரில் ஏற்பட்ட அனர்த்தங்கள் கணக்கில் அடங்கா. இதற்கு மூலகாரணம் பல வருடங்களாக நிலவிய பகையாகும்.

இவ்வாறு பருத்தித்துறை ஸ்ரீஇராம கிருஸ்ணசாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா யாழ். வேம்படி மகளிர் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அண்மையில் நடாத்தப்பட்ட தூய அன்னையின் ஸ்ரீசாரதா தேவியின் அன்பு மொழிகள் அறிமுக விழாவில் அறிமுக வுரை நிகழ்த்திய போது குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் திருமதி க. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கல்லூரியின் உயர் வகுப்பு மாணவிகள் பலர் பங்கு பற்றியிருந்தனர்.

சுவாமி சித்ரூபானந்தா அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது,

தூய அன்னை ஸ்ரீசாரதா தேவியின் 150 ஆவது வருட நிறைவில் சற்று சிந்தித்துப் பார்த்தால், உலகில் எங்கும் நடக்கும் விபரீதமான போர் கொலை யாவற்றுக்கும் பதில் கிடைக்கும்

தூய அன்னை ஸ்ரீசாரதா தேவி மறைவதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு கவலையுடன் வந்த அன்னை பூர்ணாவின் தாய்க்கு கூறிய வார்த்தைகள் நம்மை மெய் சிலிர்க்க வைக்கும். 'மகளே! உனக்கு அமைதி வேண்டுமானால் உன்னுடைய குற்றத்தையே கிளறிப்பார்.உலகத்தில் வேண்டத்தக்கவர்-வேண்டத்தகாதவர் என்று யாரும் இல்லை. உலகனைத்தும் நமதே' என்றார்.

அன்னையின் தொலை நோக்குப் பார்வையை பலர் சிந்திக்கக் கூடிய ஆற்றலை இழந்து விட்டனர். இன்று நடக்கும் கொடிய போர் வேண்டாம் எனச் சில நாடுகள் சொல்லியும் பெரிய வல்லரசான அமெரிக்கா செவி சாய்க்க மறுக்கின்றது. இதனால் உலகில் அமைதி கிட்டாது.

இன்று நம்மிடையே எடுத்ததற்கெல்லாம் போராட்டமும் குழப்பமுமாக இருப்பதற்கு மூல காரணம் நம்மிடையே மனித நேய ஒருமைப்பாடும் ஆழ்ந்த அன்பும் சகோதர நேயமும் இல்லாமையேயாகும்.

தூய அன்னை தனது வாழ்வில் தவறு செய்த எவரையும் புறக் கணித்ததாக வரலாறு கிடையாது. இன்று மாணவர்கள் இப்படிப்பட்ட புனிதமான நூல்களைப் படித்து முன்னுக்கு வரவேண்டும் என்று குறிப்பிட்டார். (உ-77)

## வடக்கு-கிழக்கு பாடசாலைகளில் உயர் வகுப்புக்களில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை நீங்கும்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் உயர்தர வகுப்புக்களில் நிலவும் ஆசிரியர் பற்றாக் குறையினை நிவிர்த்தி செய்வதற்கு மாகாணக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

பட்டதாரி ஆசிரியர்கள் நியமனத்தின் போது இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முதல் கட்டமாக கலை, வர்த்தகப் பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப் படவுள்ளனர். இதற்கமைய கலை வர்த்தகப் பிரிவுகளில் பாடரீதியாக நிலவும் வெற்றிடங்கள் தொடர்பான விபரங்களை கல்வி அமைச்சு கோரியுள்ளதாக மாகாணக்கல்விப் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 24 கல்வி வலயங்களையும் சேர்ந்த பாடசாலைகளில் உயர்தர கலை, வர்த்தகப் பிரிவுகளில் நிலவும் வெற்றிடங்கள் தொடர்பான விபரங்களை எதிர் வரும் 7ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (உ-8)

ஒலித்தக்கால் என்னாம் உவரி
எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும்
-குறள்-

வலம்புரி

## பிரதமரின் தடுமாற்றம்

சர்வதேச கடற்பரப்பில் விடுதலைப்புலிகளின் கப்பல் தாக்கியழிக்கப்பட்ட போது விடுதலைப்புலிகள் சீற்றம் அடைந்திருந்தாலும் அவர்கள் போரில் ஈடுபடவில்லை இதற்கு அவர்களின் பலவீனமே காரணமாகும். இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரம சிங்கா தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நடந்த கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது பிரதமர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகளின் ஆயுதபலத்தை அனுபவித்து இனிமேல் தாக்குப்பிடிக்க முடியாது என்ற நிலையில் சமாதான முயற்சியை முன்னெடுத்த ஐக்கிய தேசிய முன்னணி அரசின் பிரதமர் இவ்வாறு கூறி இருப்பது விசித்திரமானது.

சமாதானத்தை நிலை நாட்டுவோம் என்ற பிரசாரத்தின் மூலமே ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியை கைப்பற்றியது. அதிலும் சமாதானம் என்பதற்கு மேலாக விடுதலைப் புலிகளுடன் பேசுவோம் என்ற வாக்கே ரணில் விக்கிரம சிங்காவை பிரதமராக்கியது.

விடுதலைப்புலிகள் பலமிக்கவர்கள் அவர்களுடன் பேசுவதன் மூலமே இலங்கையின் இறைமையை பாதுகாக்க முடியுமென தேர்தல் பிரசாரங்களின் போது கூறிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இப்போது விடுதலைப் புலிகளின். கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட போதிலும் அவர்கள் மீண்டும் சண்டை செய்யாததிற்கு காரணம் அவர்கள் பலவீனம் அடைந்துள்ளார்கள். அவர்களிடம் பலமான படைபலம் இல்லை என்பது புலனாகிறதென கூறியிருப்பது ஓர் பொறுப்பற்ற செயலாகும்.

நாட்டின் பொறுப்பு வாய்ந்த பதவியை வகிக்கும் பிரதமர் சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்லும் போது மறந்தேனும் இத்தகைய வார்த்தைகளைப் பிரயோகிக்க கூடாது.

எதிர்க்கட்சிகளும், பேரினவாதிகளும் சமாதான முயற்சிகளுக்கு எதிராக செயற்படும் போது, விடுதலைப் புலிகள் பலமிழந்துவிட்டனர் எனப் பிரதமர் ரணில் கூறியுள்ளது பேரினவாதிகளை உற்சாகப் படுத்துவதாகயிருப்பதோடு, 1983 ஜுலைக் கலவரத்தை ஐக்கிய தேசியக்கட்சியே முன்னின்று நடத்தியது. அதில் எனக்கும் பங்குண்டு, நானும் பேரினவாதிதான். ஆனால், இப்போதைக்கு அந்த வடிவத்தை உள்ளடக்கி வைத்துள்ளேன் எனக் கூறுவது போல் உள்ளது.

அதேவேளை சமாதான முயற்சி அதனோடு கூடிய புரிந்துணர்வு ஒப்பந்தம் இவையெல்லாம் பொது ஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சியில் வெளியுறவு அமைச்சராக இருந்த லக்ஷ்மன் கதிர்காமர் மற்றும் நோர்வே அரசின் திட்டப்படியே நடைபெற்றது எனவும் பிரதமர் ரணில் கூறியுள்ளார்.

இது சமாதான முயற்சியில் பிரதமரிடம் இருக்கக்கூடிய நம்பிக்கையீனத்தையே வெளிப்படுத்துகிறது.

## தொண்டர் ஆசிரியர் நியமனம்
## கோரி தமிழ் எம்.பிக்கள் மறியல்

(திருகோணமலை)

திருகோணமலையில் உள்ள வடக்கு-கிழக்கு மாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் மாகாண கல்வித் திணைக்களத்தின் முன்னால் நியமனம் கோரி தொண்டர் ஆசிரியர்களும், இலங்கைத் தமிழர் ஆசிரியர்களும் இணைந்து நேற்று நடத்திய மறியல் போராட்டத்தினால் அலுவலக செயற்பாடுகள் யாவும் முற்றாக ஸ்தம்பித்தன.

நூற்றுக்கணக்கான தொண்டர் ஆசிரியர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்ட இப்போராட்டத்தில் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன் ராஜகுகனேஸ்வரன் ஆகியோரும் திருகோணமலைப் பாராளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நேற்றைய தினம் நடைபெற்ற மேற்படி மறியல் போராட்டத்தினால் கல்வி அமைச்சர் மற்றும் கல்வித் திணைக்களத்தினரும் பணியாற்றி வரும் ஊழியர்கள் எவரும் தங்களின் கடமைகளைச் செய்யவிடாது போராட்டங்களால் தடுக்கப்பட்டனர்.

இதேவேளை, அங்கு பெருமளவு பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்தனராயினும் மேற்படி இடத்தில் ஏதும் அசம்பாவிதம் நிகழவில்லை என அறிய முடிகின்றது.

இதேசமயம்,இப்போராட்டம் தொடர்பாக கலந்துரையாடல் ஒன்றைஇன்று வியாழக் கிழமை கொழும்பில் நடத்த இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் திட்டமிட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டமைப்பின் எம்.பி மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோருடனே இக்கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இதேவேளை, இக் கலந்துரையாடலில் தொண்டர் ஆசிரியர் பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்படாது விட்டால் எதிர்வரும் வாரத்தில் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல பிரதேசங்களையும் ஸ்தம்பிதம் அடையச் செய்யும் வெகுஜனப் போராட்டமாக இப்போராட்டம் மாறும் சூழ்நிலை ஏற்படும் என ரெலோ அமைப்பின் முதல்வரும் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் எச்சரிக்கும் தொனியில் கூறியுள்ளார். (உ-10)

## புராண படனப் போட்டி பெறுபேறுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைச் சைவ புலவர் சங்கம் அண்மையில் நடத்திய புராண படனப் போட்டிப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன.

பெறுபேற்று விபரம் வருமாறு,

***ஆண்கள் பிரிவு***

சுதுமலை சின்மயபாரதி வித்தியாலயம் *பாடல்*:செல்வன் யோகநாதன் மதுரன் *பொருள்:* செல்வன் யோகநாதன்மாதவன் மாணிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, *பாடல்* செல்வன் செல்வராசா கோபிநாத், *பொருள்*: செல்வன் பாலச்சந்திரன் அஜந்தன்,தெல்லிப்பழை யூனியன் கல்லூரி,*பாடல்*: செல்வன் கனகலிங்கம் சுரேந்திரன்,*பொருள்:* செல்வன் யோகராசா சுதாகரன்.

***பெண்கள் பிரிவு***

வட்டு இந்துக் கல்லூரி, *பாடல்:* செல்வி பிரியதர்சினி இராசேந்திரம் *பொருள்:* செல்வி யாழினி கனகேஸ்வரன் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி *பாடல்:* செல்வி கௌசலா முருகையா *பொருள்:* செல்வி பிரதீபா சிவஞானசுந்தரம் பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை,*பாடல்:* செல்வி விஜிதா சிங்கராசா,*பொருள்:* செல்வி நிவேதிதா பொன்னம்பலம்,சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி,*பாடல்:* செல்வி கௌரி நவரட்ணம்,*பொருள்:*செல்வி வாசுகி செல்வராசா

வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ள சைவப் புலவர்கள் எழுச்சி விழாவில் வைத்து வழங்கப்படவுள்ளன. (உ)

## ஊழியர் நீக்க சுற்று நிருபம் வெளியான செய்திக்கு மறுப்பு

(கொழும்பு)

மாகாண சபைகளின் கீழ் இயங்கும் அரச நிறுவனங்களில் 10 சதவீத ஊழியர்களை நீக்குமாறு சுற்று நிருபம் எதுவும் அனுப்பப்படவில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.


மேற்படி அரச நிறுவனங்களில் கடமையாற்றும் ஊழியர்களில் 10 சதவீதமானோரைக் குறைக்கக் கோரி திறைசேரி சுற்று நிருபம் எதனையும் அனுப்பவில்லை என பாராளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் இதனை உறுதி செய்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் பிரேரணைக்கு அமைய இது தொடர்பாக விவாதம் பாராளுமன்றத்தில் இடம்பெற்றது.

கடந்த வருடம ஒக்டோபா மாதம திறைசேரியின் செயலாளர் அனுப்பி இருந்த சுற்று நிருபத்தில் மாகாண சபைகளின் கீழ் இயங்கும் அரச நிறுவனங்களிலுள்ள வெற்றிடங்களை மாத்திரம் நீக்கியுள்ளதாக குறிப்பிடப் பட்டிருந்தது எனவும அமைச்சா சுட்டிக்காட்டினார்.

ஆயினும் நியாயமான நிலைமைகளில் திறைசேரியின் அங்கீகாரத்துடன் இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அச்சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதன் பிரகாரம் மாகாண சபைகளின் வேண்டுகோளிற்கிணங்க சுகாதாரத்துறை வெற்றிடங்களை நிரப்புவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது எனவும் அமைச்சர் அங்கு மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (உ-8)



## சாயி அருளமுதம்

மனிதன் செல்வத்தைச் சேமிப்பதாலோ அல்லது பொதுஜன வாக்குகளைத் திரட்டுவதாலோ அல்லது ஏராளமான நூல்களைத் தலைக்குள் ஏற்றுவதாலோ மட்டும் இங்குள்ள வாழ்க்கையின் பூரண பலனைப் பெற முடியாது. நற்செய்கை, நன்னடத்தைஆகியவற்றை அவன் விருத்தி செய்து அப்பியசிக்க வேண்டும். தர்மத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். மனிதன் நேர்மையான வழியில் தன்னைத் தாபரிப்பதற்குத் தேவையான அளவு பொருளை மட்டும் சம்பாதிக்க வேண்டுமெனவும், மேற்படியாக உள்ள நேரத்தையும், திறமையையும் பொது நன்மைக்காக உபயோகிக்க வேண்டுமெனவும் சுருதிகள்(வேதங்கள்) கற்பிக்கின்றன. தர்ம-அர்த்த(அறம்-பொருள்)தர்மத்தின் ஊடாக அர்த்தத்தைப் பெற வேண்டும். அப்பொழுது நிச்சயமாக அவனுக்குத் தெய்வீக அருள் நிறையக் கிடைக்கும்.

நன்றி

நாளாந்த நற்சிந்தனை

## இத்தாலி செல்ல முயன்ற பத்துபேர் கடலில் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக நேற்று முன் தினம் இத்தாலி செல்ல முயன்ற 10 பேரை பேருவளைப் பொலிஸார் கடலில் வைத்து கைது செய்துள்ளனர்.

இவர்கள் சென்ற படகில் சுமார் ஒரு மாத காலத்துக்குத் தேவையான உணவுப் பொருள்கள் இருந்ததாக பேருவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அபயரட்ண திஸ்ஸ நாயக்க தெரிவித்துள்ளார்.

முகவர் ஒருவர் இவர்களை இத்தாலிக்குஅழைத்துச் செல்வதாகக் கூறி ஒவ்வொருவரிடமும் தலா 7 இலட்சம் ரூபா பெற்றமை விசாரணை மூலம் தெரிய வந்துள்ளது. (உ-8)

## தோட்டத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் முடிவுற்றது

(கொழும்பு)

கண்டி, கந்தானை,உடுவல தோட்டத் தொழிலாளர்களின் பொது வேலை நிறுத்தம் முடிவுக்கு வந்துள்ளது.

நாள் ஒன்றுக்கு தலா 18 கிலோ கிராம் தேயிலைக் கொழுந்து பறிக்க வேண்டும். இல்லையேல் அரை நாள் சம்பளம் வெட்டப்படும் என தோட்ட நிர்வாகம் பணித்திருந்தது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து 3 தினங்களாக வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தப்பட்டு வந்தது.

இது தொடர்பாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் கண்டி மாவட்ட அமைப்பாளர் துரை மதிமுகராஜா, ஜாதிக சேவக சங்கத் தலைவர் மலியுகொட ஆகியோர் தோட்ட நிர்வாகிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்தே இப் போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப் பட்டது. (உ-8)

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறையீடு

(யாழ்ப்பாணம்)

கொடிகாமத்தில் கடந்த 28-ம் திகதி அரசியல் பணியில் ஈடுபட்டிருந்த போது பொலிஸாரால் தாக்கப்பட்ட போராளி நேற்று மாலை மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகளை எதிர் வரும் 7-ம் திகதி மேற்கொள்ள வுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரி ருவான் சந்திரசேகரா தெரிவித்துள்ளார். (ந-7)

## காய்ச்சலுக்கு சிறுமி மரணம்

(யாழ்ப்பாணம்)

கடந்த ஒருவார காலமாக இனந்தெரியாத காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்த சிறுமி நேற்று முன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

காய்ச்சல் காரணமாக ஊர்காவற்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியாசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும் சிகிச்சை பலனளிக்காததாலேயே சிறுமி உயிரிழந்துள்ளார்.

கல்பன்தாழ்வு மேற்கு காரைநகரைச் சேர்ந்த இராசையா தவச்செல்வி (வயது 14) என்ற சிறுமியே உயிரிழந்தவராவர். (ந)

## பயிற்சிப்பாசறை பிற்போடப்பட்டது

(சுண்டுக்குழி)

யாழ்ப்பாணம். சென்யோன்ஸ் கல்லூரியில் எதிர்வரும் 4,5,6-ம் திகதிகளில் ஆசிரியர்களுக்கு நடைபெறவிருந்த உதைபந்தாட்டம் சம்பந்தமாக பயிற்சிப் பாசறை பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் சிங்கள புதுவருடத்திற்கு பின்னரே இப் பயிற்சிப்பாசறை நடைபெறும் எனவும் அது தொடர்பாக பின்னர் அறிவிக்கப்படும் எனவும் உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் கிளிபேர்ட் அன்ரனிப்பிள்ளை அறிவித்துள்ளார். (த-110)

## தமிழக மீனவர்மீது கடற்படை சூடு

(கொழும்பு)

நாகபட்டின கடற்பரப்பில் மீன் பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்களை இலங்கைகடற்படையினர் சுட்டதில் ஒருவர் காயம் அடைந்துள்ளார். காயமடைந்தவர் நாகபட்டின வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை இலங்கை கடற்படையினர் எந்தவித எச்சரிக்கையும் இல்லாமல் மீனவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக நாகபட்டின அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ந-5)

## சடலம் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

கட்டுத்துவக்கு வெடித்ததில் படுகாயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்த பெண்ணின் சடலம் மரண விசாரனையின் பின்னர் நேற்று உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

கிளிநொச்சி பாரதிபுரத்தைச் சேர்ந்த இராமையா சரஸ்வதி (வயது 43) என்பவரே உயிரிழந்தவராவார். (த-6)

## தவக்கால நற்சிந்தனை

**"ஆண்டவரே நீர் உம் மக்கள் மீது இரக்கம் காட்டும் போது என்னை நினைவு கூரும்"**

எல்.கே.ஜி முதல் பணி ஓய்வு பெறுவது வரை இன்றைய சமுதாயத்திலே சிபாரிசு கடிதங்கள் ஒரு மனிதனின் வளர்ச்சியில் துணை செல்கிற அவல நிலை நம் பாரதமெங்கும் நிலவி வருகிறது. சான்றிதழ்களை கொண்டு படிப்படியாக வாழ்வை நடத்த வேண்டிய நிலை மாறிவிட்டது. ஆனால் எப்போதுமே சான்றிதழ்கள் தரும் உயர்வையும், மதிப்பையும், சிபாரிசுகளால் பெற்றுத் தர முடியாது. இயேசு மனிதன் தரும் சான்றுகளையும் புகழையும் பெரிது படுத்தாது இறைவன் தரும் சான்றிலே தான் மகிழ்ச்சி காண்கிறார். மடிந்து போகும் மனிதன் தரும் பெருமையை நாடினால் அது அழிவைத் தான் தரும்.

நிலையான பெருமையையும் சான்றையும் தருபவர் இறைவனே என்பதை இயேசு நமக்கு உணர்த்துகிறார். மனிதர் தரும் பெருமையை சம்பாதிக்க ஆசைப்படுவோர் பணத்திற்கும் பதவிக்கும் அடிமையாகி சில வேளைகளில் கீழ்த்தரமான செயல்களைச் செய்யவும் துணிந்து விடுகின்றனர். இப்படித்தான் இஸ்ராயேல் மக்கள் எகிப்திலிருந்து வல்லமையோடு மீட்டு வந்த உண்மை தெய்வத்தை மறந்து பொற்கன்றை வழிபட்டனர் நாம் முக்கியத்துவம் கொடுப்பது உடலையும் ஆன்மாவையும் அழிக்கவல்ல இறைவனின் சான்றுகளுக்காக அல்லது உடலுக்குப் புகழ் தேடி ஆன்மாவை அழிக்கின்ற அழியும் புகழுக்கா?

காவலன்

**—வடக்கு–கிழக்கு போரினால்—**

# நாடு முழுவதிலும 80ஆயிரம் விதவைகள்

(கொழும்பு)

கடந்த 20-வருடகாலம் போரினால் வடக்கு-கிழக்கில் சுமார் 40ஆயிரம் பேர் விதவைகளாக்கப்பட்டுள்ளனர் என சமூக நலன்துறை அமைச்சர் ரவீந்திர சமரவீர தெரிவித்துள்ளார்.

எம்பிலிப்பிட்டியாவில் நடைபெற்ற சுயசக்தி இறுதிநாள் நிகழ்வில் கலந்துகொண்டு பேசிய போதே அமைச்சர் ரவீந்திர சமரவீர இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் நாடளாவிய ரீதியில் போர் மற்றும் ஏனைய காரணங்களினாலும் சுமார் 80ஆயிரம் பெண்கள் விதவைகளாகியுள்ளனர்.

இவ்வாறான பெண்கள் மற்றும் சிறுவர்களின் நலன்களை கருத்திற் கொண்டு பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித் துள்ளார். (உ-8)

## க.பொ.த(சா/த) பரீட்சை முடிவு நாளை மறுதினம்

(கொழும்பு)

கடந்த வருடம் நடை பெற்ற க.பொ.த(சா/த) பரீட்சைப் பெறுபேறுகள் நாளை மறுதினம் சனிக்கிழமை வெளியிடப்பட இருப்பதாக பரீட்சை ஆணையாளர் மஹிந்த விஜயசிறி தெரிவித்தார்.

WWW.doenets.lk என்ற இணையத்தள முகவரியினூடாக க.பொ.த (சா/த) பரீட்சைப் பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள முடியும். (த)


## வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி

## கூறுவிலை கோரல்

எமது வலிகாமம் வடிசாலைக்கு வெள்ளிரும்பிலான குளிரூட்டிகள் இரண்டு புதிதாகச் செய்வதற்காக தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து கூறு விலை கோரப்படுகின்றது.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி:–03. 04. 2003–09. 03. 2003
கேள்விப்பத்திரம் ஏற்கும் திகதி :– 10. 04. 2003 முற்பகல்10. 00மணி
கேள்விப்பத்திரமதிறக்கப்படும் திகதி:– 10. 04. 2003நண்பகல்12. 00மணி
மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப்பணம் – 250/-
மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் – 5000/- உம் செலுத்தி கேள்விவிண்ணப்பப்படிவத்தையும்,நிபந்தனைகளையும், காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்,
வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி,
மானிப்பாய.

(C/5955)


# 14-வது சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டார்

(கொழும்பு)

கண்டி உடத்தலவின்ன படுகொலை வழக்கின் 14வது சந்தேக நபரை வந்தேகம பொலிஸ் நிலைய சார்ஜன் உபாலி சந்திரசிறி நேற்று முன்தினம் நீதிபதிகள் முன்னிலையில் அடையாளம் காட்டியுள்ளார். மேற்படி சந்தேக நபர் பொதுத் தேர்தலின் போது உடத்தலவின்ன ஜம்முர் ஆஸ்வர் . வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த வரிக் கணிப்புநிலையத்தின் முன்னால் வாக்களிக்கும் பொருட்டு வரிசையில் நின்றவர்களினை விரட்டினார் என்றும் வாகனத்தில் வந்து இறங்கிய இராணுவச் சீருடையை ஒத்த உடைகளை அணிந்திருந்த கும்பலொன்று வாக்காளர்களை விரட்டியடித்து விட்டு வாக்குப் பெட்டிகளை அபகரித்துச் சென்றதாகவும் மேற்படி சார்ஜன் தெரிவித்தார்.

இச்சம்பவம் இடம் பெறும் போது ஒருவர் தனது கழுத்தில் துப்பாக்கியை வைத்து மிரட்டியதாகவும் சாட்சிய மளித்தார். (உ-8)

---

### வரதன் குழுவின்...

கடந்த 2000ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் ரெலோ அமைப்பின் சார்பாக போட்டியிட்டு இருந்தார். பின்னர் அவரது நடவடிக்கைகள் காரணமாக கட்சியிலிருந்து அவர் விலக்கப்பட்டார்.

இதன் பின்னர் தனது சகோதரர் ஒருவர் உட்பட ஆறு இளைஞர்களை இணைத்து வரதன் குழு என்ற பெயரில் படையினருடன் இணைந்து செயற்பட்டு வந்தார்.

கடந்த மூன்று மாதங்களின் முன்னர் இவரது சகோதரர் இனந் தெரியாத நபர்களினால் சுடப்பட்டு படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உயிர் பிழைத்திருந்தார்.

இதன் பின்னர் வரதன் குழு உறுப்பினர்கள் மட்டக்களப்பில் இருந்து வெளியேறி சிறிது காலம் கொழும்பில். வசித்து வந்தனர்.

எனினும் 2 கிழமைகளுக்கு முன்னர் மீண்டும் மட்டக்களப்பிற்கு வந்து இராணுவத்தினருடன் இணைந்து செயற்பட்டு வந்தனர்.

நேற்றைய தினம் குழுவின் தலைவர் வரதன் சுட்டுக் கொல்லப்பட்டார். இச்சம்பவம் தொடர்பாக காத்தான்குடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(த)

---

### குடாரப்பு....

அருகில் இருந்த கிணற்றடிக்குச் சென்றேன். அங்கு மூன்று பேர் நடமாடுவதை கண்டு அவர்களிடம் தண்ணீர் கேட்டேன்.

அவர்கள் குடிப்பதற்கு தண்ணீரைத்தந்து விட்டு எனது கண்களை கறுப்புத்துணியால் கட்டி என்னை கைது செய்து கொண்டு சென்றனர்.

பின்னர் முகமாலைப் பகுதியில் என்னை விசாரணை செய்தனர். வழிதவறி முகாம் பகுதிக்குள் வந்துவிட்டேன் என்னை விடுதலைசெய்யுமாறு கோரினேன். அவர்கள் என்னை இங்கு கொண்டு வந்து ஒப்படைத்துள்ளனர்

1998ம் ஆண்டு விடுதலைப் புலிகள் அமைப்பில் சுய விருப்பின் பேரில் நான் இணைந்தேன். பின்னர் எனது குடும்பத்தவர்களை நினைத்து கவலை அடைந்து வீடு செல்லப் போகிறேன் என்று அவர்களிடம் கூறினேன். அவர்களும் எவ்வித மறுப்புமின்றி சிலமாதங்களில் என்னை வீட்டுக்கு அனுப்பி வைத்தனர். அன்றிலிருந்து அவர்களுக்கும் எனக்கும் எதுவித தொடர்பும் கிடையாது.

பின்னர் வீட்டின் வறுமை காரணமாக கிளிநொச்சியில் உள்ள விடுதலைப்புலிகளின். அரசியல் துறை மக்கள் தொடர்பகத்தில் சில நாட்களுக்கு முன்னர் வேலைக்குச் சேர்ந்தேன்.

அங்கு என்னுடன் வேலை செய்த வயதான ஒருவர் மண்ணெண்ணெய் வாங்கி வருமாறு என்னைக் கேட்டார்.

அவருக்காக மண்ணெண்ணெய் வாங்குவதற்காக வந்து வாங்கிய மண்ணெண்ணெயை தவறுதலாக நிலத்தில் சிந்தி விட்டேன்.

இதனால் மீண்டும் வேலைக்குச் செல்வதற்கு பயந்து எனது வீட்டிற்கு வந்து விட்டேன் பின்னர்தான் கணவாய் ஓடு பொறுக்க வந்த இடத்தில் நேற்றுக்காலை தான் கைது செய்யப்பட்டதாக மேலும் கூறினார். (இ-4)

# தேர்முட்டியால் வீழ்ந்த சிறுவன் மரணம்

(யாழ்ப்பாணம்)

கோயில் தேர்முட்டியில் புறாப்பிடிக்க ஏறிய போது தவறுதலாக வீழ்ந்த சிறுவன் ஒருவன் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை தனது வீட்டிற்கு அருகில் உள்ள பிள்ளையார் ஆலயத் தேர்முட்டியில். ஏறிய சமயம் தவறுதலாக விழுந்து படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டிருந்தார்.

மணியம் வீதி ஊர்காவற்துறையைச் சேர்ந்த பத்மகாந்தி சுதர்சன்(வயது-13) என்ற சிறுவனே உயிரிழந்தவராவார். (ந-7)

---

### படைமுகாம்...

பாதுகாப்பு அமைச்சருக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைத்தமையும் குடாநாட்டுப் பொது அமைப்புக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட முற்பட்டமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. (இ)

---


# மங்களகரமான திறப்பு விழா அழைப்பு

மங்களகரமான சித்திரபானு வருடம் பங்குனித்திங்கள் 20ஆம் நாள் இன்று (03.04.2003) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிமுதல் 12.30 மணிவரையுள்ள சுபநேரத்தில் எம்மால் அமைக்கப்பெற்ற,

சுபநேரத்தில் எம்மால் அமைக்கப்பெற்ற,

# குகன் ஸ்ரோர்ஸ் லங்கா எரிபொருள் நிரப்பு நிலையம்

உயர்திரு யோ.அ. அந்தோனிப்பிள்ளை அவர்களால்

(வட பிராந்திய முகாமையாளர்,இலங்கைப் பெற்றோலியம் கூட்டுத்தாபனம்)

திறந்து வைக்கப்பெறவுள்ளது.

இந்த மங்கள நிகழ்வில் கலந்துகொள்ளும்

வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,
தொலைபேசி: 222 5968

குகன் ஸ்ரோர்ஸ்
லங்கா எரிபொருள் நிரப்பு நிலையம்.

(C/5954)

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.04.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.